

NO.84, TRIRUGANASAMPANTHAR STREET, TRINCO.
Hot Line:- 0714444777, Phone: 0265674773 FaX 0711003087



அறைவு 02 இயம் 16 December 14-20, 2013

# மலைமுரசு
MALAIMURASU

வார இதழ்

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை : 30.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்


### 2014ம் ஆண்டின் ஓய்வூதியத் திகதிகள்

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் -10ம் திகதி, ஏப்ரல்- 8ம் திகதி, மே 09ம் திகதி, ஜீன், ஜீலை - 10ம் திகதி, ஒகஸ்ட்-8ம் திகதி, செப்டெம்பர்10, ஒக்டோபர் 07, நொவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் 10ம் திகதிகள்.

# 200 ஹெக்டேயரில் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம்



ஏற்றுமதி செயற்பாடுகளுடன் கூடிய வர்த்தக வலயமொன்றைத் திருகோணமலையில் உருவாக்கும் திட்டமொன்று 2014ம் ஆண்டில் ஆரம்பமாகவுள்ளது. இத்திட்டத்தினை இலங்கையின் முதலீட்டு அபிவிருத்திச் சபை முன்னெடுத்துள்ளது. 13

### இலங்கையில் பாகிஸ்தானிய அகதிகள்



பாகிஸ்தானிலிருந்து தப்பியோடி வந்துள்ள சுமார் 500 கத்தோலிக்கர்கள் இலங்கையில் அகதி அந்தஸ்த்து கோரியுள்ளனர் எனத் தெரிகின்றது. கத்தோலிக்கர்கள் அதிகமாக வாழும் 13

### பன்குளத்தில் யானைகள் இறக்கப்பட்டனவா?



திருகோணமலை, பன்குளம் பகுதியில் புதிதாக பல யானைகள் கொண்டு வந்து விடப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவை மனிதருடன் பழக்கப்பட்ட யானைகளாகக் காணப் படுவதாகத் தெரிவித்த... 13

### புனர்வாழ்வளித்தவரை ஏன் கைது செய்தீர்கள்?

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட இளைஞனை மீண்டும் கைது செய்ததற்கான காரணம் என்ன? என உச்ச நீதிமன்றம் சட்டமா அதிபரைக் கேட்டுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த ஜோசப் அமலதாஸ் என்பவரின் வழக்கை விசாரித்த போதே உச்ச நீதிமன்றம் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்... 13



## வாழ்வின் எழுச்சித் திட்டம் ஊடாக 8005 மில்லியன் – பிரதி அமைச்சர் சுசந்த

கடந்த 09ம் திகதி திருகோணமலை மாவட்ட பாராளுமன்றில் சஜித் பிரேமதாச நா.உ வால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினரும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சருமான சுசந்த புஞ்சிநிலமே.... 13

## "மகிந்த அவர்களைச் சனாதிபதியாக்கினால் மாவட்டத்தை வளமாக்கலாம்"



அடுத்த வருடம் இடம்பெறும் சனாதிபதி தேர்தலில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் சிறந்த, உறுதியான முடிவினை எடுத்து மீண்டும் மஹிந்த ராசபக்சவை சனாதிபதி ஆக்குவதன் மூலம் இம் மாவட்டத்தினை மேலும் வளமாக்கலாம் என மீள் குடியேற்றப் பிரதி அமைச்சர் திரு. வி. முரளிதரன்... 13

## காவல்துறை கைகட்டி நிற்க
# காணாமற்போனோரைக் கேட்டழுதோர் மீது தாக்குதல்





காணாமற் போனோரைக் கேட்டழுத தாய்மாரை அடையாளம் காணக்கூடிய கும்பலொன்று தாக்கியுள்ளது. கடந்த 10ம் திகதி திருகோணமலைப் பேருந்துத் தரிப்பிடத்தில் ஒன்று கூடிய தமிழ் மக்கள் காணாமற் போன தமது உறவுகளைக் கண்டு பிடித்துத் தருமாறு அமைதியாக பதாதைகளையும் படங்களையும் தாங்கிய வண்ணம் நின்றுள்ளனர். வயதான... 13

### அகற்றப்பட்டதா தமிழர் விடுதலைக் கூட்டணி?



"தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியேற்றப்பட்டு விட்டதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன" என ஜே.வி.பி இணையம் செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தி மேலும் "தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட போது தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ரெலோ, ஈபிஆர்எல்எப் ஆகிய கட்சிகளும், கட்சி சாரா..... 13

## துரித வளர்ச்சிப் போக்கில் கிழக்குப் பல்கலைக்கழகம்



2006ம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலப்பகுதியில்தான் பல்கலைககழக அபிவிருத்திக்கென அரசு முழுமையான நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டது. அந்த நிதியிற்கு ஏற்ற தலைமைத்துவமும் அமைந்து கொண்டதன் பயனாக இன்று கிழக்குப் பல்கலைக்கழகம் அபிவிருத்திப் பாதையில் மிக வேகமாகப் பயணிப்பதாக பெரும்பாலான கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தனர். 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
159A, 2ம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 fax: 026 2223071

## வணக்கம்

### அபிவிருத்தி என்னும் ஆக்கிரமிப்புக் கால்....

அபிவிருத்தி என்னும் வார்த்தையை ஈழத்தமிழர்களாகிய நாம் கேட்கும் போதெல்லாம் எமக்கு ஞாபகம் வருவது என்னவோ வாமன அவதாரம் தான்.

அகங்காரம் பிடித்த மன்னனை அடக்குவதற்காக, நாங்கள் எல்லோரும் அவதாரம் எனப் போற்றும் கடவுளின் தசாவதாரங்களில் ஒன்றுதான் வாமன அவதாரம்.

அந்த அவதாரம் குள்ள அவதாரம். ஆதலால் அக்குள்ளன் எதைக் கேட்டாலும் கொடுத்து விட முடியும் என அம் மன்னன் நினைத்த போது வாமனன் கேட்டது என்னவோ மூன்று அடி நிலம் தான்.

தருகின்றேன் என மன்னன் வாக்குறுதியளித்ததும் வாமனன் வைத்த முதலாவது அடி பூவுலகம் முழுவதையும் அளந்தது, இரண்டாவது அடி வானுலகம் முழுவதையும் அழந்தது....... எனத் தொடர்கின்றது அந்தக் கதை.

ஈழ தேசத்தில் நவீன வாமன அவதாரங்களின் பூவுலகையும், வானுலகையும் அளந்து தனதாக்கிக் கொள்ளும் நடவடிக்கையின் பெயராகவே "அபிவிருத்தி" என்னும் பதம் பாவிக்கப்படுகின்றது.

எப்போதெல்லாம் அபிவிருத்தி என்னும் வார்த்தைகள் பாவிக்கப்பட்டதோ அங்கெல்லாம் நாம் அகதியாகி அலைந்த நிலைதான் இருந்தது என்பதே எமது வரலாறு.

கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தில் தொடங்கிய அபிவிருத்தி - அகதிப் படலம் சம்பூரில் வந்து நிற்கின்றது. அது முற்றுப் புள்ளியற்றுத் தொடரும் என்பதைத் தான் அண்மைய அறிவிப்பான "ஏற்றுமதிப் பொருளாதார வர்த்தக வலயத்திற்கு 200 ஹெக்டேயர் நிலம் திருகோணமலையில்" என்பதும் சுட்டி நிற்கின்றதோ என்னவோ!

அபிவிருத்தி என்பது இன்றியமையாதது. எனினும் அவ் அபிவிருத்தியால் பயனடையப் போவது அம் மக்களே என்பதைப் பெரும்பாலும் குறித்துக் கொள்வதில்லை. அதனிலும் தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களின் போது மக்களை அகதியாக்கிப் பட்டினி போட்டு உருவாக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் சகோதர இன மக்கள் நன்மையடைவதும், பூர்வீக நிலத்தை இழந்து மக்கள் விரட்டியடிக்கப்படுவதும் நடந்து விடுகின்றது.

அதனால்தான் அபிவிருத்தி என்னும் சொல்லாடலில் ஆக்கிரமிப்பு என்னும் அனுபவமே எஞ்சிவிடும் என்னும் பயம் எழுகின்றது.

அபிவிருத்தி தவிர்க்க முடியாதது என்பதே உண்மை. அதன் உள்நோக்கம் சரியாக இருந்தால் யாரும் அதனை எதிர்க்கப் போவதில்லை.

ஆனால் உண்மையில் அதன் உள்நோக்கம்தான் என்ன?......

## பெண்கள் வலையமைப்பின் பெண்களுக்கு எதிரான 16 நாள் நிகழ்வுகள் நிறைவு

திருக்கோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் மேற் கொள்ளப்பட்ட பெண்களுக்கெதிரான வன்முறை எதிர்ப்புக்கான சர்வதேச 16 நாள் செயற்பாட்டின் மாவட்ட மட்ட இறுதி நிகழ்வு கடந்த 09ம் திகதி நடைபெற்றது.

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் திருகோணமலை அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை செஞ்சிலுவைச் சங்க நிறைவேற்று அதிகாரி திரு.ரவிச்சந்திரன், ஊடகவியலாளர் சங்க உபசெயலாளர் திரு.வ.ராஜ்குமார், இளைஞர் அபிவிருத்தி "அகம்" நிறுவனத்தின் பிரதி இணைப்பாளர் திரு.கலாரதன் ஆகியோருடன் சமூக சேவைகள் திணைக்கள திட்ட அலுவலர் திருமதி.வீ ஜிதா மற்றும் சமூக அபிவிருத்திக்கும், ஆய்வுக்குமான நிறுவன (SDRO) பிரதிநிதி திருமதி.ஜெயலோஜி ஆகியோர் பங்குபற்றினர். இந்நிகழ்வில் மாவட்ட பெண்கள் வலையமைப்பின் பிராந்திய அமைப்புகளான பட்டினமும்,சூழலும், மூதூர், தம்பலகமம், குச்சவெளி ஆகியவற்றின் உறுப்பினர் களுமாக 50க்கும் மேற்பட்டோர் பங்குபற்றினர்.

விசேடமாக இந்நிகழ்வில் ஒவ்வொரு பிராந்திய பெண்கள் வலையமைப்பும் தமது பிரதேச சிறு குழுக்களிலிருந்து தலா ஒரு பாதிக்கப்பட்ட அல்லது வறிய பெண்ணை இனங்கண்டு வாழ்வாதார ஊக்குவிப்பு நிதி வழங்கியது குறிப்பிடத்தக்கது.

திருக்கோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இத்தகைய 16 நாள் செயற்பாட்டு நிகழ்வுகள் பிராந்திய அமைப்புகளால் திருமலை- குச்சவெளி, தம்பலகமம், மூதூர் பிரதேசங்களில் மற்றும் வாகரை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றிருந்தது நோக்கத்தக்கதாகும்.




## வெடிப்பொருட்களுடன் மீனவர்கள் கைது

கடந்த 03ம் திகதி தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட கிழக்குக் கடற்படையின் விஜயபா பிரிவு இறக்கக்கண்டி பிரதேசத்தில் வெடிகுண்டுகளுடன் இரண்டு மீனவர்களைக் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோத மீன்பிடிக்கெனப் பயன்படுத்தவே இக் குண்டுகள் அவர்களிடம் இருந்ததாகத் தெரிவித்துள்ள கடற்படை அவர்களிடமிருந்த பொருட்களுடன் அவர்களைக் கைது செய்து மீன்பிடித் திணைக்கள அலுவலர்களிடம் மேல் நடவடிக்கைக்காக ஒப்படைத்துள்ளனர்.

## யானைத் தாக்குதலில் ஊர்க் காவலர் காயம்

கடந்த 12ம் திகதி மாலை ஊர்க்காவல் பணிக்காக குமரக்கடவைப் பிரதேசத்தின் மகிந்தளாய் பயிற்சி முகாமிற்குச் சென்ற ஊர்க்காவலர் நால்வரை யானை அடித்து வைத்தியசாலையில் இட்டுள்ளது.

யானையின் தாக்குதலுக் குள்ளான இவர்களை மீட்ட படையினர் குமரக்கடவை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். மேலதிகச் சிகிச்சைக்காக திருமலைப் பொது வைத்தியசாலைக்கு அவர்கள் மாற்றப்பட்டுள்ளனர்.



## பழுதடையும் புல்மோட்டை வீதி

திருமலை - புல்மோட்டை வீதியின் பெரும்பாலான இடங்களில் வீதியோரங்கள் நாள்தோறும் சேதமடைந்து வருகின்றன. எனினும் வீதியோரங்களைச் செப்பனிடும் பணிகள் அந்தளவிற்கு முன்னெடுக்கப்படுவதாக இல்லை. இதனால் பெரும் தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் போதிய பராமரிப்பு இன்றி முற்றாக அழிவடையும் நிலை தொடர்கின்றது. எனவே தொடர்புடைய திணைக்களங்கள் கவனமெடுத்து விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள மக்கள் சார்பாக கோருகின்றோம். (திருமலைப்பிரியன்)

## திருமலை செஞ்சிலுவைச் சங்கத்தின் இரத்ததான முகாம்





இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலைக் கிளையினரும் கந்தளாய் பொலிஸ் நிலையமும் இணைந்து ரஜவெவ ஆயுர்வேத மருத்துவ மனையில் இரத்ததான முகாம் ஒன்றினை நடாத்தினர். இந்நிகழ்வில் கலந்து கொண்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலைக் கிளைத் தலைவர் டாக்டர் ஈ. ஜீ. ஞானகுணாளன், கந்தளாய் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு அத்துக்கோரால, இ.செ.ச. பொருளாளர் திரு. எஸ். ஜெயசங்கர், இரத்ததான செயற்திட்டத் தலைவர் திரு. ரீ. சிவரெட்ணராஜா ஆகியோரையும் இரத்ததானத்தில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

## விபத்து

இன்று (11.12.13) மாலை 4.20 மணியளவில் சுங்கவீதி சந்தியில் வாடகைக்கு அமர்த்தப்பட்டு வந்த முச்சக்கர வண்டியும் மோட்டார் வண்டியும் மோதிக்கொண்டது. இதில் மோட்டார் வண்டியில் பயணம் செய்தவர் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அதனையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த போலீசார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர்.

இது போன்ற அநேகமான வீதி விபத்துகள் சாரதிகளின் கவலையீனங்களாலும் அளவுக்கு மீறிய வேகத்தில் பயணம் செய்வதாலும் சரியாக சமிக்ஞைகளை பின்பற்றாததாலும் நடைபெறுகிறது கருத்தில்கொள்ளவும். (இவன்கனி)







மலைமுரசு பத்திரிகையில் விளம்பரம் இடம்பெற வேண்டுமாயின் நீங்கள் சிரமமின்றி நேரடியாக ஒப்படைக்க வேண்டிய இடம்.

சன் புத்தக நிலையம். இல-406.
புதிய கல்முனை வீதி.
நாவற்குடா. மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை கட்டளைகள் பணியகத்தை சனாதிபதி கையேற்றார்

இலங்கை கட்டளைகள் பணியக நிர்வாகக் குழுவை நியமிக்கும் அலுவை சனாதிபதி தனதாக்கிக் கொண்டுள்ளார். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சட்டத் திருத்தங்களுக்கு அமைய தற்போது வரை பிரதமருக்கு வழங்கப்பட்டிருந்த அவ் அதிகாரங்கள் சனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

Sunday TIMES

## முதலீட்டுச் சபை 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெறுகின்றது

பொதுநலவாய முதலீட்டாளர் கூட்டத் தொடரின் பின்னர் சுமார் 2 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஒப்பந்தங்களை இலங்கை பெற்றுள்ளது. இம் முதலீட்டில் சுமார் 1.3 பில்லியன்களை சீனாவே முதலிடத்தில் உள்ளது.

Sunday OBSERVER

## நுரைச் சோலை தொடர்பாக விசாரணை தேவை

நுரைச்சோலை அனல்மின் நிலைய செயற்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை உருவாக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தேசிய மின்நுகர்வோர் முனையம் மற்றும் மின்தொழிற்சங்கம் ஆகியன கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

2011ல் டிசம்பர் மாதம் ஆரம்பித்த நுரைச்சோலை அனல் மின் நிலையமானது தற்போதுவரை இருபது தடவைகள் பிழைப்பட்டுள்ளது. இப் பிழைப்பாடுகளால் பெரும் நிதி இழப்பு இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ளது. இவ் அனல் மின் நிலைய நிர்மாணிப்பின் போது மேற்கொள்ளப்பட்டதாக சந்தேகிக்கப்படும் திருகுதாளங்களை ஆராயவே பாராளுமன்றத் தேர்வுக்குழு ஒன்றை விசாரணைகளுக்கென அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுவதாக பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

Sunday LEADER

## அரச எதிர்ப்பைக் கைவிடாமலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

பயங்கரவாதத்தால் சின்னாபின்னமான வடக்கை மீட்டு சனநாயகத்தை நிலைநிறுத்தி, தேர்தலை அங்கு நடாத்தியவர் சனாதிபதி எனபதை மறந்து, மக்களின் பிரதிநிதிகள் என்ற ஒரே காரணத்தைக் கொண்டு த.தே.கூ அரச எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றது என அமைச்சர் கெஹலிய குற்றஞ்சாட்டியுள்ளார்.

Sunday OBSERVER

## கொழும்பில் சிலைகள் அகற்றப்படுமா?

கொழும்பு நகரிலுள்ள நுமார் 40 பிலைகளை அகற்றி அவற்றை தேசிய அருங்காட்சியகத்தினுள் நிலைப்படுத்தும் முன்மொழிவை கொழும்பு மாநகர சபை அங்கத்தவர் ஒருவர் சபையில் சமர்ப்பித்துள்ளார்.

Sunday LEADER

## விஸ்ணு கோவில் கட்டும் முயற்சியில் மேர்வின்

களணிப் பிரதேசத்தில் விஸ்ணு கோவில் ஒன்றை அமைக்கும் முயற்சியில் அமைச்சர் மேர்வின் சில்வா இறங்கியுள்ளார். அதற்கு நிதிதிரட்டவும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் அவர் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திடம் உதவி கோரியிருப்பதாகத் தெரிகின்றது.

Sunday TIMES

## முதலீட்டுச் சபையில் 240 மில்லியன் ஊழல்

முதலீட்டுச் சபையின் சிரேட்ட அலுவலர் ஒருவர் அச் சபையின் நிகழ்ந்த ஊழல் தொடர்பாக விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். இவ் ஊழலால் பாதிக்கப்பட்ட தரப்பினரும் தமது தரப்புத் தகவல்களை வழங்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. சுமார் 240 மில்லியன் ரூபா ஊழல்கள் நிகழ்ந்துள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

Sunday LEADER

## பாரிய ஹெரோயின் கடத்தல் பிரதமர் அலுவலகம் மூடி மறைப்பு

இலங்கை வரலாற்றில் மிகப் பெரும் அளவில் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருள் கடத்தலில் சம்பந்தப்பட்ட இரு அலுவலகர்கள் மீது நடவடிக்கை எடுக்க முயற்சிக்கும் போதைப்பொருள் தடுப்பு காவல்துறையினருக்குத் தகவல்களை வழங்காது பிரதமர் அலுவலகம் மூடி மறைப்பதாக புகார் எழுந்துள்ளது. சுமார் 131 கிலோ கிராம் நிறையுள்ள சுத்தமான ஹெரோயின் மற்றும் நாட்டிற்குள் 130 கிலோகிராம் கலவை ஹெரோயின் நாட்டுக்குள் கடத்தப்பட்டுள்ளது. இவ் 261 கிரோ ஹெரோயினின் சந்தைப் பெறுமதி சுமார் 2.8 பில்லியன் ரூபாய்களாகும்.

Sunday TIMES

## கஞ்சாவைக் கடத்தச் சிறந்தது பொதுப் போக்குவரத்தே

தனியார் போக்குவரத்தூடாக கஞ்சாவைக் கடத்தினால் கைதாகும் வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதால் கடத்துபவர்கள் பொதுப் போக்குவரத்தையே பெருமளவு பாவிப்பதாக போதைப் பொருள் கட்டுப்பாட்டு அதிகாரசபை அறிவித்துள்ளது.

Sunday OBSERVER

## மருந்துப் பொருட்களின் காலாவதித் திகதி திருத்தப்பட்டுள்ளது.

ரெபலமான மருந்துப் பொருள் விநியோகிக்கும் கடையொன்றில் மருந்துப் பொருட்களின் காலாவதித் திகதியில் வஞ்சமாக மாற்றம் செய்யப் பட்டிருப்பதை கண்டுபிடித்திருப்பதாக காவல்துறை அறிவித்துள்ளது.

சுமார் 4814 பெட்டிகளில் வைத்திருக்கப்பட்ட மருந்துப் பொருட்களிலேயே இவ்வாறு காலாவதித் திகதி வஞ்சகமாக மாற்றப்பட்டிருப்பது தெரியவந்துள்ளதாக தெரிவித்த காவல்துறைப் பேச்சாளர் இவ் விடயம் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார்.

Sunday LEADER

## பல பில்லியன்களில் இலவச புத்தங்கள்

37 மில்லியன் இலவச புத்தகங்களை பதிப்பிடுவதற்காக சுமார் 2.7 பில்லியன் ரூபாய்களைச் செலவிட்டுள்ளது இலங்கை.

Sunday OBSERVER

## நாளடைந்த பாற்கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன

காலம் முடிவடைந்த பாற்கட்டிகள் (Cheese) பெருமளவில் நுகர்வோர் அதிகாரி சபையால்கைப்பற்றப்பட்டுள்ளன. இவை புதிய பொதிகளில் இடப்பட்டு மீளவும் சந்தைக்கு விநியோகிக்கப்பட பாற்கட்டிப் பொதிகளே கைப்பற்றப்பட்டுள்ளன. ஆயினும் இப் பாற்கட்டி பொதிகளை இல்லாதொழிக்கவே தாம் வைத்திருந்ததாக கம்பனி அறிவித்துள்ளது.

Sunday TIMES

## சித்திரவதை விசாரணைகள் காலவரையின்றி ஒத்துவைப்பு

யுத்தத்தின் இறுதிக் காலப் பகுதியில் முதல் தற்போதுவரை இலங்கை அரச மற்றும் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் சித்திரவதைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பவிருந்த விசாரணை காலவரையறையின்றி ஒத்து வைக்கப்பட்டுள்ளது. இவ் விசாரணையை பொதுநலவாயச் செயலகம். இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுடன் இணைந்து மேற்கொள்ளவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Sunday LEADER

## 600 சொகுசு வாகனங்கள் வரியற்றதாக வரவுள்ளன.

சொகுசு வாகன வாடகைச் சேவையை வழங்கும் முகமாக சுமார் 600 வாகனங்களை நாட்டுக்குள் இறக்கும் அனுமதியை அரசு வழங்கவுள்ளது.

கொழும்பிலிருந்து மாத்தளை, மற்றும் கட்டுநாயக்க விமானதளங்களுக்கே இந்தச் சேவை வழங்கப்படவுள்ளது. பொதுநலவாய வர்த்தக மாநாட்டுக்கு வருகை தந்த வியாபாரப் பெரும்புள்ளிகளிற் பலர் இச் சொகுசு வாகன வசதியைக் கோரியிருந்தனர். அதனடிப்படையிலேயே இச் சொகுசு வாகன வாடகை வசதி உருவாக்கப்படவுள்ளது.

Sunday TIMES

## நான்கு பாடங்கள் கட்டாயமாக்கப்படுகின்றது

இலங்கையில் இயங்கும் சர்வதேசப் பாடசாலைகளில் நான்கு பாடங்கள் கட்டாயமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என அரசு அறிவித்துள்ளது. அவை சிங்களம், தமிழ், சமயம் மற்றும் உள்நாட்டு வரலாறு என்பவையாகும்.

Sunday TIMES

## வடக்கு கிழக்கிற்கு மேலும் பல தமிழ் பேசும் காவல்துறை அலுவலர்கள்

வடக்கு மற்றும் கிழக்கு காவல்துறை அலுவலகங்களுக்கு தமிழ் தெரிந்த ஆயிரக் கணக்கானவர்கள் தெரிவிக்கின்றன. தற்போதுவரை 900 தமிழ் அலுவலகர்களும் 1500 தமிழ் தெரிந்த சிங்கள அலுவலர்களும் அங்கு நியமனம் பெற்றுள்ளனர்.

Sunday OBSERVER

## மேல்மாகாண சபைக்கு வேட்பாளராவாரா சிராணி?

எதிர்வரும் மேல் மாகாண சபைக்கு தமது வேட்பாளராக 43வது பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கா அவர்களை நிறுத்துவது தொடர்பாக எதிர்க்கட்சிகள் கூட்டாக முயற்சி மேற்கொண்டுள்ளன.

Sunday LEADER

## ஏசிஎப் கொலைகள் சர்வதேச விசாரணையைக் கோரும் உறவினர்கள்

BBC

இலங்கையில் செயற்பட்ட பிரெஞ்சு தொண்டு நிறுவனத்தின் உள்ளூர் பணியாளர்கள் 17 பேர் படுகொலை தொடர்பாக சர்வதேச விசாரனை தேவை என அந்நிறுவனம் வைத்துள்ள கோரிக்கையை அப்பணியாளர்களின் குடும்பங்களும் ஆதரிக்கின்றன. கிழக்கு மாகாணத்தில் போர் ஆரம்பமான கால கட்டத்தில் 2006 ஆகஸ்ட் 6ஆம் தேதி பிரெஞ்சு தொண்டு நிறுவனமான ஏசிஎப் நிறுவனத்தின் உள்ளூர் பணியாளர்கள் 17 பேர் அவர்களின் அலுவலகத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்கள். இவர்களில் நான்கு பேர் பெண்கள். கொல்லப்பட்ட பெண்ணின் தந்தையும் இதில் கொல்லப்பட்டார்.

தமது நிறுவனத்தின் உள்ளூர் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு இலங்கை அரச படைகளே பொறுப்பு என தற்போது குற்றச்சாட்டுகளை வைத்துள்ள ஏசிஎப் நிறுவனம் அதற்கான சாட்சியங்களும் தம்மிடம் இருப்பதாக சமீபத்தில் அறிவித்திருந்தது. இது தொடர்பில் சர்வதேச விசாரனை தேவை என்றும் ஏசிஎப் நிறுவனம் கோரியுள்ளது.

சம்பவம் இடம் பெற்று ஏழு ஆண்டுகளாகியுள்ள போதிலும் படுகொலை செய்யப்பட்ட பணியாளர்களின் குடும்பங்கள் தமது குடும்பத்திற்கு ஏற்பட்ட இந்த துயர சம்பவத்திலிருந்து இன்னமும் மீளமுடியாதவர்களாக உள்ளதாக அவர்களை சந்தித்த பிபிசி தமிழோசையின் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சம்பவம் தொடர்பாக வெளிப்படையாக பேசுவதற்கு அவர்கள் இன்னமும் தயக்கம் காட்டினார்கள். அதேசமயம், சர்வதேச விசாரனைகளின் மூலம் தான் தங்களுக்கு நீதி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாக அவர்கள் பிபிசி தமிழோசையிடம் வெளிப்படுத்தினார்கள். "எந்த விசாரனை என்றாலும் சரிபொறுப்பான வர்கள் கண்டுபிடிக்கப்படவேண்டும் எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்" என்று அவர்கள் கூறினார்கள். ஏசிஎப் நிறுவனம் இராணுவம் மீது வெளியிட்டுள்ள சந்தேகம் தொடர்பாக அக்குடும்பங்களிடம் கேட்ட போது, தாங்கள் சம்பவத்தை நேரில் காணாமல் இதனை யார் செய்தார்கள் என்று திட்டவட்டமாக தங்களால் கூற முடியாதிருப்பதாகவும் அவர்கள் பதிலளித்தார்கள்.

ஏசிஎப் நிறுவனத்திடம் இது தொடர்பாகவுள்ள சாட்சிகள் மற்றும் ஆதாரங்கள் தொடர்பாக தாங்கள் எதுவும் அறிந்திருக்கில்லை என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

ஏசிஎப் நிறுவனத்தினால் இக் குடும்பங்களுக்கு இதுவரை இரு தடவைகளில் ரூபா 10 இலட்சம் ரூபா இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டிருப்பதாகவும், விசாரனைகள் முழுமையாக முடிந்த பின்பு மேற்கொண்டு உதவி செய்வது தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என அந்நிறுவனத்தால் தங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படை மனித உரிமையுண்டு

தோழர் வில்பரட்

அன்பார்ந்த தோழர்களே, நண்பர்களே,

இலங்கைச் சமூகம் தொடர்பான செயற்பாட்டாளன் எனக் கௌரவித்து என்னை அழைத்தமைக்கு இலங்கையர் ஒற்றுமை ஒன்றியத்தினருக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1971ம் ஆண்டில் ஜே வி பி இனரால் மேற்கொள்ளப்பட்ட எழுச்சி காரணமாக நாட்டில் அவசரகால விதிகள் கொண்டு வரப்பட்டன. இவற்றிற்கு எதிராகவும், மனித உரிமை மற்றும் ஜனநாயக உரிமைகளுக்காக இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம், புரட்சிகர கம்யூ. கட்சி என்பன போராட்டங்களை நடத்தின. அவ் வேளையில் தான் இப் போராட்டங்களில் நானும் இணைந்தேன்.

இன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விடுவிக்குமாறு இலங்கை அரசிற்கு எதிராக போராட்டம் நடத்துகிறோம். இப்

**உலக மனித உரிமைத் தினம்**
**டிசம்பர் 10**


போராட்டங்களை நாம் நடத்துவது ஜே வி பி இனரின் அல்லது விடுதலைப் புலிகளது அரசியல் திட்டங்கள் அல்லது தந்திரோபாயங்களுக்காக அல்ல. பதிலாக ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது அரசியல் அல்லது செயல்களுக்கு அப்பால் அடிப்படை மனித உரிமை உண்டு என உறுதியாக நம்புவதால் செயற்படுகிறோம். துர்அதிர்ஸ்டவசமாக ஜே வி பி இனரோ அல்லது விடுதலைப் புலிகளோ ஏனையோரின் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதில்லை. அத்துடன் இவ்வாறான மீறல்களை மேற்கொள்பவர்களும் இவர்களே. இவை அவர்களுக்கான பிரச்சனைகளே தவிரஎமக்குரியதல்ல.

மனித உரிமைக்கும், ஜனநாயக உரிமைக்குமான எமது ஈடுபாடு என்பது அவர்களின் செயற்பாடுகளுக்காகவோ ஒழுக்கங்களுக்காகவோ அல்ல, ஒவ்வொரு தனி மனிதனினதும் மனித உரிமைக்காக அவர்களின் நடத்தைகள் எவ்வாறு இருந்த போதும் நாம் எழுந்து குரல் எழுப்பாவிடில் நிலமைகள் எதிர்காலத்தில் படு மோசமாக அமையும் என்பதை உறுதியாக நம்புவதால்செயற்படுகிறோம்.

1975ம் ஆண்டளவில் இடதுசாரித் தோழரான உபாலி குரே அவர்கள் பிரித்தானியாவிலிருந்து இலங்கை வந்திருந்தார். தொழிற்சாலைகளுக்கு அருகே அரசியல் கலந்துரையாடல்களை நடத்த ஒழுங்குகள் செய்தோம். ஏக்கல தொழில் மையத்திலே முக்கிய கூட்டம் இடம்பெற்றிருந்தது. அங்கே தேசிய இனப் பிரச்சனை குறித்து லெனின் அவர்களின் கோட்பாடுகள் தொடர்பாக பேசப்பட்டது. அக் கூட்டத்தில் பல அம்சங்களை அவர் குறிப்பிட்டார்.

முதலாவது முதலாளித்துவ ஜனநாயகத்தில் விரும்பினால் பிரிந்து செல்வதுடன் கூடிய சுய நிர்ணய உரிமை ஆகும். இரண்டாவது அவ்வாறான சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை எழும் நிலமையில் அதனை மதிப்பதும், பாதுகாப்பதும் கடமை எனக் குறிப்பிட்டார். சோசலிஸ்ட் என்ற வகையில் நாம் பிரிவினைக்காக போராடுபவர்கள் அல்ல ஏனெனில் நாம் உலகம் முழுவதிலும் வாழும் சகல தொழிலாளர்களையும் இணைத்து முதலாளித்துவத்தினையும், அதன் இதர சுரண்டல் வடிவங்களையும் ஒழிப்பதற்காக போராடுபவர்களாகும். மூன்றாவதாக சுய நிர்ணய உரிமை என்பது தேசிய இனப் பிரச்சனை சார்ந்த ஒன்று மட்டும் அல்ல. எமது சமூகத்தில் உயிரியல், கலாச்சாரம், மதம், மொழி போன்ற பல்வேறு வேறுபாடுகள் உள்ளன. விசேடமாக இலங்கையில் 50 சதவீதத்திற்கு அதிகமானவர்கள் பெண்களாவர். பெண்களுக்கான ஒடுக்கு முறை என்பது மானிட சமூகத்தின் வரலாற்று ரீதியானது என்ற போதிலும் அதுவும் விவசாய சமூக உருவாக்கத்தின் பகுதியாக அவை அமைந்த . போதும் இன்று பெண்களுக்கான ஒடுக்கு முறை உலகம் முழுவதிலும் பல்வேறு வடிவங்களில் காணப்படுகிறது. இலங்கையின் மூலை முடுக்கு வரை குடும்ப வன்முறை அதிகரித்துச் செல்கிறது. அவர்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டா? சுய நிர்ணய உரிமையைப் பயன்படுத்துவதற்கு சட்டங்களும், சமூக விதிகளும் பலவிதங்களில்தடையாக உள்ளன.

ஆரம்ப காலத்தில் வடக்கு கிழக்கில் தமிழ்த் தீவிரவாதம் என்பது 30 இற்கு மேற்பட்ட குழுக்களால் செயற்படுத்தப்பட்டது. அவர்களின் அரசியல் சுய நிர்ணய உரிமை ஒரு குழுவினால் பறிக்கப்பட்டது. 1987ம் 89 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இதனையே சிங்கள தேசியவாதிகளான ஜே வி பி இனரும் மேற்கொண்டார்கள். இதன் காரணமாக சிங்கள முதலாளித்துவ அரசினால் அவர்களை இலகுவாக அழிக்க முடிந்தது. அவர்களின் ஜனநாயக விரோத



செயல்கள், ஒடுக்கு முறைகளால் மக்களிடமிருந்து விலகினார்கள், மக்களும் அவர்களிலிருந்து விலகினார்கள் இதன் காரணமாகவே 1977 இன் பிற்பகுதியிலிருந்து நாம் ஜே ஆர் மற்றும் பிரேமதாச அரசுகளினதும், மற்றும் தேசியவாத, இனவாத சக்திகளுக்கு எதிராக போராடும் நிலைக்கு தள்ளப்பட்டோம்.

இன்று யார் அதிகாரத்தில் உள்ளார் என்பதை விடுத்து மனித உரிமைக்காகபோராடும் நிலையில் உள்ளோம்.. 70பதுகளின் ஆரம்பத்தில் நான் உணவுத் திணைக்களத்தில் வேலை பார்த்தபோது யாரையும் தமிழர் சிங்களவர் எனப் பிரித்துப் பார்த்ததில்லை. அத் திணைக்களத்தின் கணக்காளர் அனைவரும் தமிழர்களே. சிரேட்ட எழுதுவினைஞர்களும் அவர்களே. நாம் அனைவரும் நண்பர்கள். காரியாலயத்திலும், தொழிற் சங்கத்திலும் இணைந்தே செயற்பட்டோம். எனது இனிய நண்பர் திரு. ராமசாமி அவர்கள் பருத்தித்துறையைச் சார்ந்தவர். திருமணத்தின் பின்னர் அவர் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்றார். 20 வயதினை எட்டிய குழுவினராகிய நாம் 1977ம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிந்து ஒரு வாரத்தின் பின் அதாவது 1977ம் ஆண்டு ஆகஸ்ட் 1ம் திகதி ராமசாமி வீட்டிற்குச் சென்று குடாநாடு முழுவதும் சுற்றிப் பார்த்தோம். தேர்தல் முடிந்த பிரச்சாரங்களின் எச்ச சொச்சங்களை நாம் பார்க்க முடிந்தது. அடுத்த 10 நாட்களில் சகலதும் மாறியது. எமது நல்ல நண்பர்களையும் தொடர்பு களையும் இழந்தோம்.

ஒவ்வொரு மனிதனுக்கும் பல்வேறு அடையாளங்கள் உள்ளன. சட்டத்தரணி, நீச்சல் ஆசிரியர், சாஸ்திரிய சங்கீத பிரியர், விலங்குகளை நேசிப்பவர், மனித உரிமை செயற்பாட்டாளர், சோசலிஸ்ட் எனப் பல அடையாளங்கள். தேசியவாதி என்பவன் ஓர் அர்த்தமற்ற சிறிய ஒடுங்கிய கண்ணாடி ஊடாகவே ஒவ்வொருவரையும் பார்க்கிறான். அவ்வாறான ஒடுங்கிய பார்வை தவிர்க்க முடியாமல் யதார்த்தினை மறைப்பதால் அடிப்படையில் தவறான அம்சத்தினூடாக மக்களை அளக்கிறான்.

நாம் இலங்கையில் நிலைத்து நீடிக்கும் சமாதானத்தை எட்ட வேண்டுமெனில் முதலில் இவ்வாறான தவறான அணுகுமுறையைக் கைவிடவேண்டும். மனிதர்கள் கொண்டிருக்கும் பல்வேறு அடையாளங்களைப் புரிந்து, அதனை அங்கீகரித்து,வெவ்வேறு மக்கள் தமது தேவைக்கு ஏற்றவாறு அடையாளங்களை ஒழுங்கு முறைப் படுத்துகிறார்கள் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனைய மக்களை நாம் எவ்வாறு அடையாளம் காண்கிறோம் என்பது சமாதானத்தினை எட்டுவதற்கு மிக அவசியமாகும்.

இன்றைய காலத்தில் தினமும் மனித உரிமை மீறுபவர்களை அறியும் போது அவை அரசினைச் சார்ந்தவர்களாவே உள்ளனர். நாட்கள் வாரமாகி , வாரம் மாதமாகி, மாதம் வருடமாகும் போது இம் மீறல்கள் பலமடங்காகி இறந்தவர்கள், காணாமல் போனவர்கள், கடத்தப்பட்டவர்கள் என்போரின் தொகையும் அதிகரிக்கிறது. இந் நிலையை எட்டும்போது நாம் யாரைக் குற்றம் சாட்டுவது என்ற அடுத்த நிலைக்கு செல்கிறோம். இவ்வாறான செயற்பாடுகள் எவ்வித பலனையும் தரப்போவதில்லை.

இன்றைய யதார்த்தத்தினைப் புரிந்து கொள்வதே அதன் ஆரம்ப புள்ளியாக அமையும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அரசு தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கான நியாயமான தீர்வுகளைத் தரத் தவறியுள்ளது. இதுவே தீவிரவாதத்தை பலப்படுத்துவதற்கான காரணியாக உள்ளது.

இவ்வாறான பின்புலத்தில் இக் கூட்டத்தில் நான் கூறக்கூடியது என்னவெனில் மீண்டும் பலமான இடதுசாரி இயக்கத்தை நாம் கட்டி எழுப்புவதே அவசர தேவையாகும். பிரித்தானிய குடியேற்ற ஆட்சியாளர்கள் எமது மண்ணையும் அதிகாரத்தையும் சில கல்வியாளர்களிடம் கையளித்துச் சென்றனர். அக் காலகட்டத்தில் செயற்பட்ட இடதுசாரி இயக்கங்கள் ஆரம்ப காலங்களில் காணப்பட்ட சில பிரச்சனைகளுக்கான இலக்குகளை எட்டியிருந்த போதும் பல முடிவடையாமல் இன்னமும் உள்ளன.

இடதுசாரி இயக்கத்தினை மீண்டும் கட்டி எழுப்பவேண்டும் என நான் குறிப்பிடுவது என்பது நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஜனநாயக விரோத, பேரினவாத எண்ணங்களைக் கொண்டவர்கள், அல்லது நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாசிஸ்ட் இயக்கங்களை ஆதரிப்பவர்கள் இவ் இடதுசாரி இயக்கத்தில் இணைய முடியாது. இதில் ஜே வி பி இனரையும் ஒதுக்கியே கூறுகிறேன். ஏனெனில் அவர்கள் ஜனநாயக விரோத சக்திகள் மட்டுமல்ல பேரினவாதிகளுமாகும். மறுபக்கத்தில் தமிழ்த் தேசிய இயக்கத்தின் முற்போக்கு வரையறைக்குள் உள்ளவர்களை இணைப்பது அவசியம் என எண்ணுகிறேன். குறிப்பாக இடதுசாரிக் கோட்பாடுகளின் அடிப்படையில் பிரச்சனைகளை அணுகுபவர்கள் அல்லது இடதுசாரிச் சிந்தனைகளின் திசைவழிகளில் நீண்ட காலம் பயணித்தவர்கள் அடங்குவர்.

இடதுசாரிப் போக்குடன் வேறு அரசியல் அமைப்புகளில் செயற்படும் தோழர்களே இடதுசாரி இயக்கத்தின் மீளுருவாக்கத்திற்கு பிரதான பங்களிப்பாளர்களாக வேண்டும். இவ்வாறான உருவாக்கத்தின்போது தமிழ்த் தேசியவாதத்திற்குள் இயங்கும் முற்போக்கு கொள்கைகளை நோக்கி நகரும் தோழர்களை அவை ஈர்த்தல் அவசியமானது. அதே போன்றே முஸ்லீம் மற்றும் மலையக தோழர்களையும் அக் கொள்கைகள் சென்றடைய வேண்டும்.

இது இலகுவான இலக்கு அல்ல. அதுவும் அவ்வாறான இணைப்பு முயற்சிகளை திணித்துச் செல்லவும் முடியாது. இதற்கு மிக அதிக அளவிலான பிரயத்தனமும், பொறுமையும், காலமும் தேவையாகிறது. இல்லையேல் இவ்வாறான இணைப்பு அலுவல்கள் சிலசமயம் மேலும் பிளவுகளை அதிகரித்து எமது இலக்குகளை அழித்து விடவும் கூடும்.

இத்தகைய எண்ணங்களை நோக்கி அதேவேளை எதிர் நோக்கக்கூடிய சவால்கள் ஸ்தாபனக் கட்டமைப்புகள் தொடர்பான உரையாடல்களை நாம் எதிர்வரும் காலங்களில் நடத்த வேண்டும். இதன் அடிப்படையில் முதலாவதாக, தற்போதுள்ள நிலமைகள் குறித்து தெளிவான புரிதல்கள் அவசியமானவை. இன்றைய எமது வாழ்வுக் காலப்பகுதி புரட்சிக்கு முன்னதான காலகட்டமல்ல என்பது எனது கருத்தாகும்.

இரண்டாவதாக குழுவாத அரசியலை நாம் உடைத்தாக வேண்டும். இதுவே சுதந்திரமான உரையாடலுக்கும், கூட்டுச் செயற்பாட்டிற்கும் தடையாக உள்ளது.

மூன்றாவதாக ஒடுக்கு முறைக்குள் அகப்பட்டுள்ள மக்களிடையே ஜனநாயகத்தையும், ஐக்கியத்தையும் வளர்க்க செயற்பட வேண்டும். சகல மக்கள் அமைப்புகளையும் ஒன்றிணைக்க சளைக்காது உழைக்க வேண்டும்.

நாம் இடதுசாரி இயக்கம் ஒன்றினை இலங்கையில் மீளக் கட்டுவதற்கு இவை பொருத்தமான சில எண்ணங்களாகும்.

**கடந்த ஜூலை மாதம் பிரான்சில் நடைபெற்ற நிகழ்வில் தோழர் வில்பரட் ஆற்றிய உரையின் சுருக்கப்பட்ட வடிவம்.**

**தமிழில் வி.சிவலிங்கம்**

**நன்றி - "எதுவரை" இணையச் சஞ்சிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையிற் சோழர்கள்

முதலாம் இராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்திகளில் ஒன்று "கொல்லமும், கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழ மண்டலமும்..." என்று சோழர் ஆட்சியில் ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்ட இடங்களில் இலங்கை ஈழமான மும்முடிச் சோழ மண்டலம் என்ற பிரிவில் அடங்கி இருந்ததைக் குறிப்பிடுகிறது.

இராஜகேசரி அருள்மொழி வர்மன் என்ற பெயரால் ஆட்சியின் தொடக்ககாலத்தில் அழைக்கப்பட்ட முத லாம் இராஜராஜ சோழனின் ஆட்சிக் காலம் கி.பி 985 முதல் கி.பி 1012 வரையாகும்.

"சோழ மரபினரின் பொற்காலம்" என்பதோடல்லாமல் தென்னிந்திய வரலாற்றிலேயே ஒரு பொற்காலம் என்று போற்றத்தக்க வகையில் ஆட்சி செய்த இம்மன்னனின்இயற்பெயர் "அருண்மொழிவர்மன்".




இவனது முப்பதாண்டு ஆட்சிக் காலத்தில் சோழப்பேரரசு ஆட்சி முறை, இராணுவம், நுண்கலை, கட்டடக்கலை, சமயம், இலக்கியம், வணிகம் ஆகிய பல்வேறு துறைகளில் புதிய எழுச்சியைக் கண்டது.

இராஜராஜ சோழனின் மகன் முதலாம் இராசேந்திர சோழன் (கி.பி.1012-1044). இராஜராஜ சோழன் தன்னுடைய ஆட்சிக் காலத்தின் தொடக்கத்திலேயே இராசேந்திர சோழனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டித் தன் ஆட்சிப் பொறுப்புக்களைஅவனுடன் பங்கிட்டுக் கொண்டான்.

இராஜேந்திரன் இளவரசனாக இருந்த பொழுதே சோழர் படைகளுக்குத் தலைமை வகித்தவன். வேங்கி, கங்கை மண்டலங்களுக்கு மகா தண்ட நாயகனாக நியமிக்கப்பட்டவன். "கங்கை கொண்ட சோழன்" எனற விருதுப்பெயர் கொண்ட இராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் சோழநாடு இலங்கை, மாலை தீவு, கடாரம், ஸ்ரீவிஜயம், மலேயா (சிங்கப்பூர் - மலேசியா) சுமத்ரா ஆகிய வற்றை உள்ளடக்கிய மிகப்பெரிய நிலப் பரப்பாக இருந்தது.

முதலாம் இராஜராஜன் கி.பி 993 இல் இலங்கையின் மீது படையெடுத்து நாட்டின் வட பகுதியைக் கைப்பற்றிக் கொண்டான். அப்போது தலைநகரமாக இருந்த அனுராதபுரத்தைக் கைவிட்டுப் பொலன்னறுவையை ஜனநாதமங்கலம் எனப் பெயர்மாற்றி தலைநகரம் ஆக்கினான்.

இதன் பின்னர் கி.பி 1017-1018 ஆம் ஆண்டில்,முதலாம் இராசேந்திர சோழன் பராந்தக சோழன் காலத்திலேயே தேடப்பட்டுக் கண்டறிய முடியாமல் போன பாண்டிய அரசர் களால் சிங்கள அரசர்களிடம் கொடுத்து வைக்கப்பட்டதாகச் சொல்லப்படும்.

மணிமுடியையும், செங்கோலையும் கைப்பற்றுவதற்காக இலங்கையின் தென்பகுதியான ருகுணு இராச்சியத்தைத் தன் படைகளை அனுப்பிக் கைப்பற்றினான்.

இதன் மூலம் முழு இலங்கையையும் சோழர் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தான். இதைத் தொடர்ந்து சோழ நாட்டு மண்டலங்களில் ஒன்றாக மாறிய இலங்கை "மும்முடிச் சோழ மண்டலம்" எனப் பெயர் பெற்றது.ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த சோழப்பேரரசின் பகுதிகள் கீழ்வருமாறு அமைந்து இருந்தது.

1. சோழ மண்டலம், 2.இராசராசப் பாண்டி மண்டலம், 3.ஜெயங்கொண்ட சோழ மண்டலம் (தொண்டைநாடு), 4. மும்முடிச் சோழமண்டலம் (இலங்கை) 5.முடிகொண்ட மண்டலம் (கங்கபாடி நாடு), 6.நிகரிலிச் சோழமண்டலம் (நுளம்பாடி,பல்லாரிப்பகுதிகள்), 7.அதிராஜராஜ சோழமண்டலம்(கொங்கு),8.மலைமண்டலம் (கேரளம்),9.வேங்கை மண்டலம் (கீழைச் சாளுக்கியம்) **(தொடரும்)**

## எத்தனை காலம் தான்......?

நமது நாட்டின் பல பகுதிகளில் குடும்பப்பிரச்சினை, காதல்ப்பிரச்சினை, காணிப்பிரச்சினை, எல்லைப்பிரச்சினை, சொத்துப்பிரச்சினை என்றெல்லாம் தொடர்ச்சியாக இடம் பெறுவது வழமையான நிகழ்வுகளாகும்.

அதனால் ஏற்படும் கோபங்களினாலும் ஆத்திரங்களினாலும், மோதல்கள், காயங்கள், அவயவ இழப்புக்கள், ஏன்? கொலைகள் கூட இடம் பெற்றன. அயலில் மாத்திர மல்ல சொந்தக் குடும்பங்களுக்கிடையே அதுவும் ஒரே வீட்டுக்குள் இடம்பெற்ற படுமோசமான கோரச் சம்பவங்களையும் சுட்டிக் காட்டலாம்.

அவ்வாறான பிரச்சினைகள் அதிகரிக்க, அதிகரிக்க நீதிமன்றங்களிலும் சிறைச்சாலைகளிலும், இட நெருக்கடிகள் தோன்ற ஆரம்பித்தன. அதனால் அவ்வாறான நிறுவனங்களை புதிதாக நிர்மாணிப்பதற்கும், அதன் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கும், பாரிய நிதியை செலவிட அரசுக்கு நேர்ந்துள்ளது.

இது ஒரு உப்புச்சப்பற்ற காணித் தகராறு. அதனால் ஏற்பட்டதே அந்த கோஷ்ரி மோதல் அதை நீதவான் நீதிமன்றில் சுமுகமாக தீர்த்து வைக்கக் கூடிய நிலைமைகள் இருந்தாலும், பொலிசார் அதை ஊதிப் பெரிதாக்கி சட்டமாஅதிபரின் ஆலோசனையைப் பெற நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தார்கள்.

அனேகமாக சட்டத்தைப் பற்றியும் நீதிமன்ற, பொலிஸ் நிலைய, நடவடிக்கைகள் பற்றியும் பொதுமக்களுக்கு போதிய தெளிவு இல்லாததே அவ்வாறான சிறு பிரச்சினைகள் பெரிதாக்கபடுவதற்கு முக்கிய காரணி என்பதை மிக திடமாகக் கூறலாம். பொது மக்களுக்கு அத்துறைகள் தொடர்பாக சிறிதளவான அறிவு இருப்பின் எந்தவொரு ஏமாற்றுக்காரர்களாலும் அவர்களை என்றுமே ஏமாற்ற முடியாது.

அந்த இரு சாராருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலினால் காயங்கள் ஏற்பட்டாலும் அங்கு ஒருவருக்கு மட்டும் பெரிய காயம் ஏற்பட்டு சுயநினைவை இழந்த நிலையில் அப்பகுதி வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற வேளையில் அங்கு மருத்துவர்கள் பற்றாக்குறை காரணமாக அவர் உடனடியாக கொழும்பு அரசினர் பொது மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

மேலும் அவருக்கு ஏற்பட்ட காயம் மிகக்கடுமையாக இல்லாத காரண த்தினால் ஓரிரு நாட்களில் வீட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டார். ஆனால் எதிரிகள் பிணையை பெறக்கூடாதென்ற தீய நோக்கில், இன்னமும் காயக்காரர் மருத்துவ மனையில் இருப்பதாக பொலிசார் உண்மைக்கு பிறம்பான வற்றை நீதிமன்றில் தெரிவித்ததால் எதிரிகளுக்கு பிணை வழங்க நீதவான் சற்று தயக்கம் காட்டினார்.

இருப்பினும் எதிரிகளின் சட்டத்தரணி தனது வாதத்தை சிறப்பாக முன்னெடுத்துச் சென்றதால் எதிரிகளுக்கு பிணை வழங்கப்பட்டது. அது மாத்திரமல்ல வைத்திசாலையின் பொறுப்பதிகாரியினால் குறிப்பிட்ட காயக்காரர் சுமார் ஒரு வாரத்திற்கு முன்னே வீடு சென்று விட்டார். எனக் குறிப்பிடப்பட்ட கடிதத்தினை சட்டத்தரணி நீதவான் நீதிமன்றில் சமர்ப்பித்ததையடுத்து பொலிசார் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

அந்த விடயத்தினால் கடும் சீற்றத்திற்குள்ளாகிய பொலிசார் குறித்த வழக்கை "கொலை முயற்சி" என சித்தரித்துக் காட்டியதால் நீதவான் நீதிமன்றிலிருந்து மேல் நீதிமன்றம் வரை கொண்டு செல்லப்பட்டது. அவ்விதமான வழக்குகள் சட்டமாஅதிபரின் அனுவலகத்திற்கு அனுப்பப்பட்டு அறிக்கை பெறப்படுவது வழமையே அதன் பின்னரே மேல்நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும். அதுவரை நீதவான் நீதிமன்றிலே அவ்வாறான வழக்குகள் தொடர்ந்து இடம் பெறும்.

மேலும் பொலிசார் அந்த வழக்கில் மிகவும் கரிசனை காட்டினார்கள். அது சாதாரண கொலை முயற்சியாக கருதியதை விட அது ஒரு கொலைக்குற்றம் என நிரூபிக்கும் பாணியில் அவர்கள் நடந்து கொண்டனர்.

இதற்கிடையில் எதிரிகள் தத்தமது அமைதியை விரும்பி வேறு ஊர்களில் வசிக்க வேண்டியநிலை ஏற்பட்டதையடுத்து காயக்காரரின் உறவினர்கள் எதிரிகளின் வீடுகளில் இருந்து மிக பெறுமதியான பொருட்களை களவாடிச் சென்றிருந்தனர்.

அது தொடர்பாக பொலிசார் முறைப்பாடு செய்யப்பட்டாலும், காயக்காரின் மேல் உள்ள கோபதாபத்தின் மேல் உண்மைக்கு பிறம்பாக திருட்டு முறைப்பாடு செய்யப்பட்டதாகக் கருதி அது தொடர்பில் எந்தவித விசாரணையோ அல்லது திருடப்பட்ட பொருட்களை கண்டு பிடிப்பதிலோ, பொலிசார் எவ்வித அக்கறையும் காட்டவில்லை.

மேல் நீதிமன்ற நீதிபதிக்கு வழக்கின் தன்மை நன்கு புரிந்து விட்டது. அது ஒரு காணித்தகராரினால் ஏற்பட்ட மோதலிலே குறிப்பிட்டவர் பெரிய காயத்திற்கு உள்ளாகியுள்ளாரே தவிர அது வேணு மென்று புரியப்பட்ட கொலை முயற்சி அல்ல எனவே மேல் நிதிமன்ற நிதிபதி அவர்கள் இரு சாராரையும் பார்த்து இவ்வாறு கூறினார்.

இந்த வழக்கு மேல் நீதிமன்றத்தின் நேரத்தையும் காலத்தையும் வீணாக்குகிறது. எனக் கருதுகிறேன் இது நீதவான் நீதிமன்றில் சமாதானமாக தீர்த்து வைத்திருக்கப்பட வேண்டியதொன்று எனவே நீங்கள் இருசாராரும் சமாதானமாகப்போக விரும்புகிறீர்களா? இருசாராரும் "ஆம்" என பதிலளித்தனர்

மேல் நீதிமன்ற நீதவான் காயக்காரரைப்பார்த்து "மோதலின் போது உமக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ள தென்பதை இந்த மன்றம் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் அது சிறிதளவு காயங்கள் ஏற்பட்டுள்ளன. திடீர்கோபத்தினாலும், ஆத்திரத்தினாலும் அவ்விதமானவைகள் ஏற்படுவது வழமை தகுந்த தீர்வை பெற்றுத்தராது அவை மேலும் மேலும் உங்கள் அனைவரையும் சிக்கலுக்குள் கொண்டு போய்விடும்" என்றார்.

ஆனாலும் அவர் காயக்காரரைப் பார்த்து "உம்மிடம் இந்த வழக்கை முன் கொண்டு செல்ல 'பணவசதி இருக்கிறதா? "இல்லை ஐயா!" "எதிரிகளைப் பார்த்தால் அவர்கள் வசதியானவர்களாக தெரிகிறது, உமக்கு அவர்களிடமிருந்து நஷ்டஈடு பெற்றுத் தந்தால் சமாதானமாக போவீரா? "ஆம் ஐயா" அப்படியென்றால் உமக்கு ஏற்பட்ட காயத்திற்கான செலவை ஏற்கக்கூடிய வகையில் கேழும்" என்றார்.

"ஐந்து இலட்சம்" என்றார் காயக்காரர். நீதிபதிக்கு கோபமும் வந்தது அதேநேரம் காயக்காரரின் அறியாமை காரணமாக சிரிப்பும், வந்தது திடீர் என ஒரு பார்வை பார்த்து இவ்வாறு கூறினார்.

இந்த நாட்டில் அகாலமாக இறந்த ஒருவருக்கு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நஷ்டஈட்டுத் தொகை ஒரு இலட்சமாகும். அவ்வாறு இருக்கையில் நீர் இவ்விதம் கேட்பது பொருத்தமற்றதே என்றார்"

மேலும் உடலில் எந்தவித இழப்பும் உமக்கு ஏற்படவில்லை. தலையில் காயத்திற்கான தழும்பு மாத்திரமே உள்ளது. மற்றும்படி சகல உறுப்புக்களும் நேர்த்தியாக இயங்குகின்றன. அத்துடன் நீர் ஓர் அங்கவீனராகவும் மாறவில்லை. இன்னும் உமக்கு ஒரு மாதகால அவகாசம் தரப்படுகிறது. யோசித்து அடுத்த தவணையில் பதிலை கூறவும் என்று வழக்கை ஒத்திவைத்தார்.

ஒரு மாதகாலத்தின் பின் அந்தக் காயக்காரர் தனக்கு 21/2 இலட்சம் நஷ்டஈடு வேண்டுமென்று மன்றில் கூறினார். நீதவானுக்கு கண்கள் சிவந்தன அவருக்கு புரிந்து விட்டது காயக்காரருக்கு பின்புலமாக பலர் செயல்படுகிறார்கள். எனவே அவரே ஒரு தீர்ப்பை வழங்கினார்.

நீதவான் குறித்த நான்கு எதிரிகலும் மொத்தம் 50,000/-ஐ செலுத்தும்படி தீர்ப்பை வழங்கி வழக்கை முடித்து வைத்தார். காயக்காரர் சார்பில் குளிர்காய அங்கு வந்திருந்தவர்களின் முகங்கள் அனைத்தும் கருகிப்போன வடைகள் போல் ஆகின.

அந்த தகாராருக்குரிய காணி குறித்த காயக்காரருக்கு உரித்தானதல்ல.

## ...நாட்டு நடப்பு...

அது அவரின் மூத்த சகோதரரின் காணி அதுவும் அரச ஒதுக்கீட்டுக்காணி. அதில் அத்து மீறி கட்டடங்களைக் கட்டியது மல்லாமல் அயலவர்களுக்கு தொந்தரவு கொடுத்ததாலேயே அந்த கைகலப்பு இடம் பெற்றது.

குறித்த காணியில் இருக்க இடமளித்தவருக்குத் தெரியாமலேயே திருட்டுத்தனமாக காணி அனுமதிப் பத்திரத்தை காயக்காரரின் மூத்தசகோதரர் பெற்றிருந்தார். தற்பொழுது அனுமதியற்ற கட்டடங்கள் அனைத்தையும் அழிக்கும்படி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு நீதிமன்ற த்தால் தீர்ப்பு ஏற்கனவே வழங்கப்பட்டு ள்ளமை குறிப்பிடத்தக்கது.

- துட்டகைமுனு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ அழைத்ததாக... ஒரு ஞாபகம்....

சிறுகதை

"ஐயையோ.. அம்பி மண் விளையாடுவது பார்த்துக் கொண்டா இருக்கிறீங்க....." காலுக்குப் போடும் சொக்ஸ் கைக்குப் போட்டு முடமாக்கப் பட்ட போது அம்பிக்கு வயது இரண்டு.

"ஐயையோ.. அம்பி கண்ட கண்ட வார்த்தை எல்லாம்... பேசுவது..." அர்த் தம் புரியாத வார்த்தைகளுக்காக உதடு வீங்கச் சுண்டப்பட்ட போது அம்பிக்கு வயது நான்கு.

"டேய்...அம்பி தலை இடிக்குது... பெனடோலும்... ஜிஞ்சியரும் வாங்கி வா... ரோட்டில் ஓரமாப்போ... இரண்டு சைட்டையும் கவனமாய்ப்பார்த்து ரோட்டக் குரஸ் பண்ணு.. கடக்காரன் மிச்சத்தில் ஏமாத்துவான்...

கவனமாகக் கணக்குப் பார்த்து வாங்கி வா... முன் கதவக் கவனமாக பூட்டிப் போட்டுப் போ..." அம்பி முன் கதவை நோக்கிப் போனான் "நீ உள்ள போ...." சோடாப் போத்தலுடன் கடைக்குப் போகும் தந்தையைப் பார்த்துக் கொண்டிருந்த போது அம்பிக்கு வயது பதினைந்து.

"டேய்... அம்பி... கண்டமாதிரி ரவுண்டப் எல்லாம் நடக்குது நீ ஜீன்ஸ் போட வேண்டாம்..., காற்சட்டைபோடு அப்பத்தான் சின்னப் பெடியனாய்த் தெரிவாய்..." அரைக் காற்சட்டை போட்டு தந்தையின் சைக்கிள் பின் கெரியரில் டியூசனுக்குப் போனபோது அம்பிக்கு வயது பதினெட்டு.."

"எதிர் வீட்டு ராசாத்தியிடம் தினமுரசு வாங்கியபோது.. தாய் சண்டை போட்டாள்" அதஇதக் காட்டி என்ர பிள்ளைய வளைச்சுப் போடவா? பாக்கிறாய்..." எதிர்த்துச் சண்டைபோடும் ராசாத்தியை வியப்புடன் பார்த்து நின்றான். ராசாத்தி அவனைப் பார்க்கும் போது முகம் சிவந்து வெட்கப்பட்ட அம்பிக்கு வயது இருபத்தி ஐந்து.


அம்பிக்கு பெண்பார்க்கப் போன போது... அந்தப் பெண் அம்பியுடன் கதைக்க வேணும் எண்டு கேக்க... "எழும்பு அம்பி இந்தப் பெண் எங்க குடும்பத்துக்கு ஒத்து வராது...." என்று தாய் எழுந்து போனாள்.

முகம் எல்லாம் பல் தெரிய சிரித்த படி இருந்த அம்பி... திடீர் மாற்றத்தால் வாயை மூட முடியாது விகாரமாய் முகத்தைக் கோணியபோது அம்பிக்கு வயது இருபத்தி எட்டு.

ஒரு அறிஞனின் கூற்று "அனுப வம் என்பது நல்ல சீப்புப் போன்றது. ஆனால் அது நம் கைகளுக்கு கிடைக் கின்ற போது நம் தலையில் முடி இருப்ப தில்லை..."

அம்பிக்கு உலக அனுபவம் தேவை என்று பெற்றவர்கள் உணர்ந்த போது அம்பி அவர்களிடம் இருந்து தூர விலகி இருந்தான். அம்பி கற்பனாவாத உலகத்தில் சஞ்சரிக்கத் தொடங்கி இருந்தான்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த குளக்கோட்டு மன்னனின் வரலாறே அம்பியை பாதித்தது. குளக்கோட்டு மன்னனோ அல்லது



அவரது மனைவியோ.... அம்பியை பாதிக்கவில்லை. அம்பியை அதிமாகப் பாதித்தவர்கள் குளக்கோட்டு மன்னனது தேர்ச் சாரதி முகில்வண்ணனும் அவன் மனைவி முல்லையுமே.

"எட்டிசை மண்வெட்டிக் கொண்டே
ஏழரைச் சுற்றாம்
மரத்தை இனதா வெட்டி
தட்டி ஒரு காலாலே எற்றி
அது விழ முன்னம் தரணி மீதில்
ஒட்டி ஒரு குளம் அமைத்து அங்கு
ஊறு நீரும் கொண்ட அருளையுற்ற
-வீரன்"

"ஆகா... அற்புதம் குளக்கோட்டு மன்னா... அற்புதம். எட்டுத்திக்குகளிலும் மண்ணை வெட்டி ஏழரைச் சுற்றுள்ள பாரிய மரத்தை வெட்டி, காலினால் எற்றி தட்டி வீழ்த்தும் முன்னர் இப் பூமியில் ஒரு குளத்தைக் கட்டி அதில் நீரையும் நிறைவாகப் பெற்ற வீரனே... ஆகா... அருமை மன்னவா.. உன் பெருமையை என்னவென்று உரைப்பேன்...."

பரந்து விரிந்து கிடந்த கந்த ளாய்க் குளத்தை வியப்புடன் பார்த்து நின்றான். முகில்வண்ணன். திடீர் என்று குதிரைக் குளம் பொலிகள் கேட்கத் தொடங்கின, மன்னவரின் ரதம் வேகமாக அவனைத் தாண்டிச் சென்றது.

"நிறுத்துங்கள் ரதத்தை" கூவிக் கொண்டே ரதத்தின் பின்னால் முகில் வண்ணன் ஓடினான் ரதம் நின்றது. கையை அசைத்தபடி ரதத்தில் இருந்து குதித்தாள் முல்லை.

"ஆகா நான் இல்லை என்றதும் மன்னவன் ரதம் செலுத்திய முல்லையே நீ.. வாழ்க..'' உரத்துக் கூவியபடி முல்லையை நோக்கி ஓடினான்.

முகில்வண்ணன் ஓடி வருவது கண்டு முல்லை ஓட.. பெரும் காடு நெருங் கியது.

''அடக் கடவுளே.. காடு நெருங்குகிறது... முல்லை ஓடாதே நில்.

துவண்ட எப்பா...

துவண்ட எப்பா.. (ஓட வேண்டாம்) ராணுவம் அம்பியை துரத்திப்பிடித்து. கந்தளாய்க் குள்க்கட்டிற்கு குண்டு வைக்க வந்ததாக அம்பி கைது செய்யப்பட்டான். பின் மனநிலை பாதிக்கப்பட்டவன் என்று விடுதலை செய்யப்பட்டான்.

அரச மாளிகை, முகில் வண்ணன் மன்னன் வருகைக்காக ரதத்தில் காத்துக்கிடக்கின்றான். மன்னன் வரவில்லை... ஏனோ இன்று மன்னன் வரத்தாமதமாகிறது. ரதத்தில் இருந்தபடி உப்பரிகையை நோக்கினான் முகில் வண்ணன்.

"அடடா... உப்பரிகையில் என் தேவதை அல்லவா... நிக்கிறாள்.." உப்பரிகையை நோக்கி முகில்வண்ணன் கை அசைத்தான்.... முல்லை அங்கிருந்தபடி கையசைத்தாள். ரதத்தில் இருந்து குதித்து உப்பரிகைப் படிகளில் தாவி ஏறினான் உப்பரிகையில் முல்லையைக் காணாது அங்கும்... இங்கும்... தேடினான்.

"முல்லை...முல்லை.." என்று முனகிக் கொண்டிருந்த அம்பியை குண்டுக் கட்டாக தூக்கிப் போனார்கள் பொலிசார். பின்னர் பொது மக்களுக்கு நீர் வழங்கும் தண்ணீர்த் தொட்டியில் ஏறி தண்ணீரில் நஞ்சு கலக்க முனைந் ததாக அம்பி குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டான்.

"நீர் தண்ணீர்த் தொட்டியில் ஏறியது உண்மையா..." நீதிபதி கேட்டார். "மன்னவா.. நான் ஒரு குற்றமும் அறியேன்... உப்பரிக்கையில் என் முல்லையைத் தேடினேன்.. காவலர் என்னை இங்கு அழைத்து வந்தார்.

மன்னா... நீதிபதி தலையில் கைவைத்தார். வழக்கை மருத்துவ அத்தாட்சிப் பத்திரத்துடன் சமர்ப்பிக்க உத்தரவிட்டார். மருத்துவ அத்தாட்சிப் பத்திரம் கூறியது அம்பி மனநோயாளி என்று. ஆலயமும் மணி மதிலும் கோபுரமும்

அழகு வாய்ந்த
சேதமில்லாப் பூங்காவும்

"ஆகா... அற்புதம்...! அற்புதம்...! மன்னவா.... உன் பணியோ.... அரும்பணி. நந்தவனச் சூழலில் தன்னை மறந்தான் முகில்வண்ணன். என் நந்தவனக் குயிலே....! முல்லை நீ எங்கே போனாய்? கோணேசர் உற்சவம் களை கட்டி இருக்கும் வேளை, எங்கே போனாய் முல்லை? இப்போதெல்லாம். என்னை விட்டு நழுவிப் போய் விடுகிறாய்.

இரண்டு பெண்கள், கதைத்துப் பேசி உரசி கலகலத்துப் போனார்கள். "அடி முல்லை நான் இங்கிருக்கும் போது நீ எங்கேயடி போகிறாய்....? முகில்வண்ணன் சட்டென்று முல்லையின் கையைப் பிடித்தான். "பளார்" அம்பி கன்னத்தைப் பொத்திக் கொண்டான்.

" பாவம் ஏன்டி அறைஞ்சனி அதுக்குப் பைத்தியம்" "அடி முல்லை நீயா என்னை அறைந்தாய்...? சொல்லி விட்டு போ....? மீண்டும் அம்பி பெண்கள் கூட்டத்தை நெருங்க முனைந்தான். கோயில் காவலர்களால் நையப் புடைக்கப்பட்டு வெளியேற்றப்பட்டான் அம்பி.... "மன்னா.. இதுவா உன் மனுநீதி? முல்லையை என்னிடம் இருந்து பறித்து.

உன் காவலரைக் கொண்டு தாக்கினாயே. இதுவா உன் மனுநீதி..." அம்பி இரைந்து கத்தினான். அம்பியைச் சூழ பல்வேறு. தொனிகளில் உரத்தும்.... மெதுவாகவும் அவனைச் சூழ எதிரொலித்தது.

அம்பி பைத்தியமா............?

**வி.கௌரிபாலன்**
**புறப்பிழந்த வண்ணாத்துப் பூச்சிகள்**

---

# தானம் எப்படி செய்வது?

குட்டிக்கதை

ஒரு ஊரில் ஒரு துறவி இருந் தார். அவரை நாடி பலரும்,அவரது உபதேச மொழிகளை பெற்று இன்புற்று வாழ்ந்தனர்.

அந்த ஊரில் ஒரு கருமியான செல்வந்தன் இருந்தான். அவனுக்கும் மோட்சம், முக்தி போன்ற சில வார்த் தைகள் தெரியும்.மோட்சம் கிடைக்க செல வில்லாத வழியைக் காண எண்ணி யிருந்த அவனுக்கு,உளளூர் துறவியின் ஞாபகம் வந்தது.ஒரு நல்ல நாள் பார்த்து அந்தக் கருமி அத்துறவியைச் சென்று பார்த்து வணங்கினான்.

துறவியிடம், "சுவாமி, எனக்கு மோட்சம் கிடைக்க வழி சொல்ல வேண்டும்" என்றான். துறவியும், "சாஸ்தி ரங்கள் தெரிவிக்கிறபடி தர்ம மார்க்கத்தை கடைப்பிடிக்க வேண்டும்.யாராவது ஏழை பசியோடு வந்தால் அன்னமிட வேண்டும். மேலும் தான தர்மங்கள் செய்து வந்தால் மோட்சம் கிட்டும்" என்றார்.

துறவியை வணங்கிப் பின் வீடு திரும்பினான் அக்கருமி. துறவியின் வார்த்தைகளை நினைவுபடுத்தி பார்த் தான். தினம் தினம் தன்னைத் தேடி வரும் ஏழைகளுக்கு நாம் அன்னமிட்டு வந்தால் நமக்கு ஒன்றுமில்லாமல் போய் நாமும் ஏழையாகி விடுவோம்... என்று நினைத்து அவன் ஒரு முடிவிற்கு வந்தான்.

தினம் தினம் யாராவது ஒரு பிச்சைக்காரனுக்கு ஒரு கைப்பிடி அரிசி தானம் செய்தான். சில மாதங்கள் கழித்து அக்கருமி மீண்டும் அத்துற வியைப் போய்ப் பார்த்தான். துறவியும் "ஏனப்பா நீ தினமும் ஏழைகளுக்கு அன்னதானம் செய்கிறாயா?" என்று கேட்டார்.

அவனும், "ஆமாம் தினமும் யாராவது ஒருவருக்குக் ஒரு கைப்பிடி அரிசி தருகிறேன்" என்று பெருமையாகச் சொன்னான்.

துறவி பதில் எதுவும் பேசாமல், அவர் பக்கத்தில் இருந்த ஒரு மரத்தின் அடி பாகத்தைத் தன் கைவிரல் நகத்தால் கீரலானார்.

இது தொடரவே... கஞ்சன் பொறுக்க முடியாமல் துறவியிடம், "அய்யா தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்றான்.

அவரும் "என் கை நகத்தால் இம்மரத்தை வெட்டி சாய்க்கப் போகிறேன்" என்றார். அக்கஞ்சனும் "அய்யா அது எப்படி சாத்தியம்? ஒரு பெரிய மரத்தை நகத்தால் கீறிச் சாய்க்க எப்படி முடியும்? கோடாளியினால் தான் வெட்டிச் சாய்க்க முடியும்" என்று பெருமையாகப் பேசினான்.



உடனே துறவி, "ஒரு நாளைக்கு வெறும் ஒரு கைப்பிடி அரிசியை தானம் செய்து விட்டு நீ மோட்சம் பெற முடியும் என்று எண்ணும் போது, இதுவும் சாத்தியம் தான்" என்றார்.

"கருமிக்குப் புத்தி தெளிந்தது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## தேடுகிறேன்

தேடுகிறேன்.........

தேடுகிறேன்...........
ரூபாய்க்குள் கிடைத்த சந்தோசம்
ஸ்டர்லிங் பவுனுக்குள்
தொலைந்துபோன நாட்கள்........

கருப்பு அழகிகள்
ஓரப்பார்வையிலே உயிருரசிப்போன
வெள்ளை குமரிகள்
அரைகுறை ஆடைக்குள்........

வேர்வையில் குளித்து
வெறுந்தரையில் சயனம்போய்.........
போர்வையில் ஒளிந்துகொண்ட
பொய்யான வாழ்க்கைக்குள்..............

ஊர்வம்பும் ஊர்துரட்டும்
வேலியால் எட்டிப்பேசி...........
பிளட் வாழ்க்கை
ரெடிமட் சிரிப்பில்........

தேடுகிறேன்.........

நாட்டுக்கோழி நண்டுக்குழம்பு
மாட்டிரச்சியும் சூட்டிரச்சியும்...........
என்றோ அடக்கமான
"சவகாம்பரா" deep ப்ரீசர்......................
ரத்தம்சிந்த சண்டையிட்டோம்
கட்டித்தழுவி உணர்ந்துகொண்டோம்
ரத்தமுருஞ்சி முதுகில் குத்தும்......
தவித்தமுயல் அடிக்கும் கூட்டம்........

தேடுகிறேன்..........
ஆனால் எனக்குத்தெரியும்........
நான் தொலைத்தது..........
குளத்திலில்லை
சமுத்திரத்தில்.

**அகிலன் குருள்**

## நட்புக்கு

முடித்து வைத்த
நினைவுகளை
முடிச்சவிழ்ப்பதற்கு முன்
முந்திக் கொண்டு வருகிறது
நனவு நிலை நடிப்புக்கள்...!

கடந்து வந்து காலங்கள்
நடந்து சென்ற பாதைகள்
காற்றோடு கலந்து போன
கசப்பான நினைவுகளாகின...!

சொட்டுச் சொட்டாய்
கொட்டிக் கொண்டிருக்கும்
கொஞ்சல் மழைத்துளி போல
பட்டும் படாமலும் வந்து
ஒட்டியுரசலாடும் உன் நினைவுகள்...!

சிரித்துச் சிரித்துப்
பேசியதில் இன்று
திகட்டிக் கொண்டு நிற்கின்றது.
நம் நட்பு...!

உன்னை நினைத்ததில்
என் மனதிற்கும்
தாள்களை ஒற்றிக் கொண்டு நிற்கும்
என் பேனாவிற்கும் தான்
வலி அதிகம்...!

போதும்
உன் நினைவுகளும்
நிஜமில்லாதபோலவிம்பங்களும்
தெவிட்டி விட்ட
நம் நட்பிற்கு
தெரிந்தே வைக்கும்
முற்றுப்புள்ளியிது.

**வே. சசிகலா**
கிழக்குப் பல்கலைக்கழகம்

## கைவிட்டுப்போன கறுப்புவைரம்

இன வெறியர்களுக்கோர்
சிம்ம சொப்பனம்!

இருண்ட கண்டத்தை
வெளிச்சம் போட்டு காட்டிய
ஆயிரம் சாதுரியன்களின்
அவதாரம்!

அறவழிவைத்தியத்தால்
அடக்குமுறைப் பைத்தியம்
அறவே குணமாகாது எனக்கண்டு
'அதிரடி' வைத்தியம் செய்து
அதிரவைத்த "நாட்டு" வைத்தியன்!

நீண்ட சிறையடைப்பு
காட்டாற்று வெள்ளத்தாலும்
விடுதலைத் தீபம் ஏந்திய
உனது
நீண்ட பயணப் படகை
மூழ்கடிக்க முடியவில்லை!

அடிமைதனை ஒடிக்க
ஆக்ரோஷமாக எழும்
ஆற்றல் மிகு கரங்களின்
ஆதர்ஷ புருஷன் நீ!

மேரு மலையை
பனி மூட்டம்தான் மறைத்துவிட்டது!
நாளை அது நிச்சயமாய்
புதுச் சூரியனை
முடியில் சூடியபடி
மீண்டும் எழுந்து காட்சிதரும்!

மாமனிதா
உன்னிழப்பைத் தாங்காது
மனங்கலங்கி
அழுகின்றோம் நாம்
ஆனாலும்,
எம்மோடு சேர்ந்து
இரத்தக் காட்டேரிகள் எம்மால்
சகிக்கவே முடியவில்லை!

**ஷெல்லிதாசன்**

## உறைந்தான் நெஞ்சில!

கார் உடல், வெள்ளை உள்ளம்,
கதிர் அவன், ஆப்பிரிக்கன்!
வேர் முதல் வேண்டும் என்றார்,
விதைத்தனன் சுதந்திரத்தை!
தேர்கிலர் வந்தவர்கள்,
செயல்தலை கீழாயிற்று!
ஓர் இரு பத்தேழாண்டு
உயர்சிறைக்குள் மண்டேலா!

வந்தனன், மக்கள் வெள்ளம்,
வாழ்த்துக்கள் வரவேற்புக்கள்!
தந்தனன் உரிமை எல்லோரும்,
தாங்கினன் தாக்க வில்லை!
'எந்தை' என்றார் எல்லோரும்
இழந்தது கொடுங்கோல் தன்னை!
விந்தைதான் தொண்ணூற்றைந்தில்,
விழிநீரோடுரைந்தான் நெஞ்சில்!

**தாமரைத்தீவான்**
(சுச்சந்தீவு கிண்ணியா)

## இருப்பிடம்

வனங்கள் அகற்றும் போனாலும்
வசிப்பிடக் கவலையில்லை
விலங்குகளுக்கு
இருக்கவே இருக்கிறது
மனித இதயங்கள் பல
இன்னும் வசதியாக!

**ஷெல்லிதாசன்**

# வரலாற்று நாயகன் நெல்சன்மண்டேலா



மண்டேலாவின் முழுப்பெயர் நெல்சன் ரோபிசலா மண்டேலா. நெல்சன்மண்டேலா என்றே பொதுவாக அழைப்பார்கள். 1918 ம் ஆண்டு ஜுலை மாதம் 18 நதேதி தென்ஆப்பிரிக் காவில் உள்ள குலு கிராமத்தில் ஒரு மண் குடிசையில் பிறந்தார். இவரது தந்தை சோசா பழங்குடி மக்கள் தலைவர்.

மண்டேலா இளம் வயதில் ஆடு, மாடு மேய்த்துக்கொண்டே பள்ளிக் கூடத்தில் படித்தார். போர் புரியும் கலைகளையும் பயின்றார். 1941 ம் ஆண்டு ஜோகன்ஸ்பர்க் சென்று பகுதி நேரத்தில் சட்டக்கல்வி படித்தார். ஒரு தங்கச் சுரங்க பாதுகாப்பு அதிகாரியாகவும், எஸ்டேட் ஏஜெண்டாகவும் வேலை பார்த்தார்.

தென்ஆப்பிரிக்க (கறுப்பர் இன) தலைவர் நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகள் சிறையில் இருந்தபின் விடுதலை செய்யப்பட்டார். தென்ஆப்பிரிக்க நாட்டில் கறுப்பர்கள் (நீக்ரோக்கள்) பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். அங்கு வெள்ளையர்கள் சிறுபான்மையினர். ஆனாலும் ஆட்சி பீடத்தில் வெள்ளையர்களே அமர்ந்தார்கள்.

கறுப்பர்களின் நலனை பாதுகாப்பதற்காக "ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ்" என்ற கட்சி உருவானது. அதன் தலைவரான நெல்சன் மண்டேலா, இன வெறி பிடித்த வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து போராடினார். அரசாங்கம் கடுமையாக கெடுபிடி செய்ததால்1961ம் ஆண்டில் மண்டேலா தலைமறைவானார். அவரை பிடிக்கவாரண்டு பிறப்பிக்கப்பட்டது. 1962ம்ஆண்டு மண்டேலா கைது செய்யப்பட்டார்.

தென்ஆப்பிரிக்க அரசை கவிழ்க்க முயன்றதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. மண்டேலாவுக்கு 1964 ம் ஆண்டு ஜுன் 12 நதேதி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது அவருக்கு 46 வயது. 1988 ம் ஆண்டு கடுமையான காச நோய் ஏற்பட்டு, மரணத்தின் எல்லைக்கே சென்றார். அதனால் வீட்டுச் சிறைக்கு மாற்றப்பட்டார்.

மண்டேலாவை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை உலகம் முழுவதும் எழுந்தது. ஆனால் தென் ஆப்பிரிக்க நிறவெறி ஆட்சியின் தலைவராக இருந்த போந்தா, மண்டேலாவை விடுதலை செய்ய மறுத்து வந்தார். மண்டேலாவை விடுதலை செய்யும்படி வற்புறுத்தி மண்டேலாவின் மனைவி தலைமையில் ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் தொடர்ந்து நடந்து வந்தன.

தென்ஆப்பிரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய ஜனாதிபதியாக டெக்ளார்க் பதவிக்கு வந்தார். அவர் மண்டேலாவை விடுதலை செய்ய முன் வந்தார். இதனால் மண்டேலாவின் விடுதலை நாளை உலகமே ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தது. மண்டேலா 11.2.1990 அன்று விடுதலை செய்யப்படுவார் என்று ஜனாதிபதி டெக்ளார்க் அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

மண்டேலா 1962.ல் சிறையில் அடைக்கப்பட்டார். ஏறத்தாழ 27 ஆண்டுகள் சிறையில் இருந்தார். உலக வரலாற்றிலேயே மண்டேலாவை போல இவ்வளவு நீண்ட காலம் சிறையில் வாடிய தலைவர்கள் கிடையாது. விடுதலை பெற்றபோது அவருக்கு வயது 71.

மண்டேலாவை வரவேற்க உலகம் முழுவதும் ஏற்பாடுகள் நடந்தன. இந்தியா சார்பாக பிரதமர் வி.பி.சிங் தலைமையில் வரவேற்பு குழு அமைக்கப்பட்டது. தென்ஆப்பிரிக்க அரசாங்கம் அறிவித்தபடியே 11.02.1990 அன்று மாலையில் மண்டேலா விடுதலை செய்யப்பட்டார்.

மண்டேலாவுடன் அவர் மனைவி வின்னிகை கோர்த்தபடி சிறையில் இருந்து வெளியே வந்தார். சிறைச் சாலையின் வாசலில் ஆப்பிரிக்க நாட்டு தலைவர்கள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் அவரை உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் வரவேற்றனர்.

ஏராளமான தொண்டர்கள் ஆப்பிரிக்க கொடியை அசைத்த படி வரவேற்றனர். சிலர் கைதட்டி ஆரவாரம் செய்தனர். மண்டேலாவும், அவரது மனைவியும் கூடியிருந்தவர்களை நோக்கி கையை உயர்த்தி வரவேற்பை ஏற்றுக் கொண்டனர்.

பின்னர் மண்டேலாவை போலீசார் பாதுகாப்பாக,கேப்டவுன் நகருக்கு அழைத்துச்சென்றனர். சிறைச்சாலையின் வாசலில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த டெலிவிஷன் மற்றும் புகைப்பட நிபுணர்கள்அவரை படம் எடுத்தனர். மண்டேலா விடுதலையான நிகழ்ச்சி தென்ஆப்பிரிக்க நாடு முழுவதும் டெலிவிஷனில் நேரயாக ஒளிபரப்பப்பட்டது.

மண்டேலா விடுதலையானதும், பிரதமர் வி.பி.சிங் அவருக்கு பாராட்டு தெரிவித்தார். மண்டேலா விடுதலையான சிறிது நேரத்தில் அவரிடம் பிரதமர் வி.பி.சிங் எழுதிய பாராட்டுக் கடிதம் கொடுக்கப்பட்டது. உங்களது சுதந்திர போராட்டத்துக்கு இந்தியா என்றும் உறுதுணையாக இருக்கும் என்று வி.பி.சிங் அந்த கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார்.

மண்டேலா விடுதலை செய்யப் பட்டதை உலக தலைவர்கள் பலர் வரவேற்றார்கள். கேப்டவுன் நகருக்கு திரும்பிய மண்டேலா அங்கு ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியினர் மத்தியில் பேசினார். அவர் கூறியதாவது:-

இனவெறி ஆட்சியை தனிமைப் படுத்த சர்வ தேச சமுதாயம் தொடர்ந்து பிரசாரம் செய்ய வேண்டும். என்னுடைய விடுதலை மட்டும் பேச்சுவார்த்தைக்குத் தேவையான அடித்தளம் ஆகாது.

நிற வேறுபாடு இல்லாமல் ஜன நாயக ரீதியில் தேர்ந்து எடுக்கப்படும் அமைப்புதான் நம் நாட்டின் எதிர் காலத்தை தீர்மானிக்க வேண்டும். அரசியல் அதிகாரத்தின் மீது வெள்ளையர்களின் ஏகாதிபத்தியத்துக்கு முடிவு காண வேண்டும். கறுப்பர்களுக்குச் சம உரிமை கிடைக்க வேண்டும். அதுவரை போராடுவோம்.

உலக சமாதானத்துக்காக மண்டேலா ஆற்றிய சேவைகளை பாராட்டி அவர் சிறையில் இருக்கும் போதே இந்திய அரசு 'நேரு சமாதான விருது' வழங்கியது. கணவர் சார்பில் வின்னி டெல்லிக்கு வந்து அந்த விருதை பெற்றார். மண்டேலாவின் தியாகம் வீண் போகவில்லை.1994 மே 10 நதேதி அவர் தென்ஆப்பிரிக்காவின் அதிபர் ஆனார். அவர் அதிபர் ஆனபின், 1998 ம் ஆண்டு முதல் தென்ளளஆப்பிரிக்க பள்ளிகளில் தமிழ், தெலுங்கு, இந்தி, குஜராத், உருது ஆகிய மொழிகளை கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார்.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## ஜில்லா விற்காகா காஜலின் நீச்சல் உடை

ஜில்லா படத்திற்காக நீச்சல் உடையில் நடித்துள்ளாராம் காஜல் அகர்வால். காஜல் அகர் வாலை பொறுத் நடித்திருந்தாலும் நீச்சல் உடையில் படத்துக்கு பிறகு விஜய்யுடன் முதல் முறையாக காஜல் நீச்சல் படமாக்கப்பட்டது. கதைக்கு நொடிகள் மட்டுமே இக்காட்சி இயக்கத்தில் விஜய், என நட்சத்திர பட்டாளமே ஜல்லிக்கட்டில் களமிங்கவுள்ளது.



தவரை கிளாமர் வேடங்களில் நடித்ததில்லை. துப்பாக்கி நடிக்கும் ஜில்லா படத்துக்காக உடையில் நடித்த காட்சி தேவைப்பட்ட காட்சி என்பதால் சில படத்தில் இடம்பெறுகிறதாம். நேசன் மோகன்லால், பூர்ணிமா பாக்யராஜ் நடித்துள்ள இப்படம் பொங்கல்

## அஞ்சலி வெளியே நித்யா மேனன் உள்ளே!



முனி, காஞ்சனா படங்களை தொடர்ந்து ராகவா லாரன்ஸ் தற்போது இயக்கிவரும் படம் 'முனி 3 கங்கா'.இந்தப் படத்தில் கதையின் நாயகியாக டாப்சி நடித்து வருகிறார். கதையின் ப்ளாஷ் பேக்கில் வரும் நாயகியாக நடிக்க அஞ்சலி ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். ஆனால் அவரது தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட சில பிரச்சனைகளால் இப்போது தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வரும் அவரை தொடர்பு கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார் ராகவா லாரன்ஸ். இதனால், முனி 3 கங்கா படத்தில் அஞ்சலிக்கு பதிலாக நித்யா மேனனை ஒப்பந்தம் செய்திருக்கிறார். இப்போது நித்யா மேனன் சம்பந்தப்பட்ட காட்சிகளை போ'ரூரில் உள்ள டி.ஆர்.கார்டனில் எடுத்து வருகிறர் ராகவா லாரன்ஸ்.

## ஜீவாவின் "யான்" ஆன் .தி வே

விரைவில் ரசிகர்களுக்கு இசை விருந்து படைக்கவருகிறது ஜீவாவின் "யான்" திரைப்படம்.பிரபல ஒளிப்பதி வாளரான ரவி.கே.சந்திரன் இயக்குனர் அவதாரம் எடுத்து இயக்கி வரும் படம் யான். ஜீவா, துளசி நாயர் ஜோடியாக நடிக்கும் இப்படத்திற்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசை அமைக்கிறார்.



யான் படத்தின் படப் பிடிப்பு கடந்த சில மாதங்களாக விறுவிறுப பாக நடந்து வந்தது. இப்போது படத்தின் பெரும்பாலான படப பிடிப்பு முடிந்து, போஸ்ட் புரொடக்?ன் வேலைகள் சுறுசுறுப்பாக நடந்து வருகிறது. விரைவில் திரைக்கு வரவுள்ள இப்படத்தின் ஓடியோ வெளியீட்டு விழா வருகிற 15ம் திகதி சென்னையில் பிரம்மாண்டமான முறையில் நடை பெறவிருக்கிறது.

## ராணாவின் டார்கெட் அனுஷ்கா

நடிகர் ராணாவின் காதல் வலையில் சிக்கியுள்ளாராம் பொம்மாயி. அனுஷ்காவும், ராணாவும் 'ருத்ரமாதேவி' படத்தில் இணைந்து நடிக்கின்றனர். தெலுங்கு, தமிழ் ஆகிய இரு மொழிகளில் இப்படம் வருகிறது. இதன் படப்பிடிப் பில்தான் இவர்களுக்குள் நெருக்கம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.



படப்பிடிப்பின் ஓய்வு நேரத் தில் தனி யாக உட்கார்ந்து மணிக்கணக் கில் பேசுகிறார்களாம். மேலும் இருவரும் காதலிப்பதாக டோலிவுட்டில் தகவல்கள் வெளியாகியுள்ளன. ராணாவுடன் ஏற்க னவே ஸ்ரேயா, திரிஷா, இலியானா, போன் றோர் இணைத்து பேசப்பட்டனர். இப்போது அந்த பட்டியலில் அனுஷ்காவும் சேர்ந்துள்ளார்.

## ட்விட்டருக்கு வந்துட்டாருய்யா வடிவேலு



தனது அன்பார்ந்த ரசிகர்களுடன் நேரடி தொடர்பு வைத்துக்கொள்வதற்காக அச்சாரமிட்டுள்ளார் நடிகர் வடிவேலு. நீண்ட இடைவேளைக்குப் பின் நமது வைகைப்புயல் வடிவேலு நடித்து வரும் படம் "ஜகஜால புஜபல தெனாலிராமன்". இதில் வைகைப்புயலுக்கு ஜோடியாக "பில்லா 2" புகழ் மீனாக்ஷி திக்ஷித் நடிக்கிறார். "போட்டா போட்டி" புகழ் யுவராஜ் இயக்கத்தில் உருவாகிவரும் இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. டி.இமான் இசையமைக்கும் இப்படத்தை பிரம்மர்ண்டமாக தயாரித்து வருகிறது ஏ.ஜி.எஸ். நிறுவனம். இதில் வடிவேலு இரண்டு வேடங்களில் தோன்றி ரசிகர்களை வயிறு குலுங்க சிரிக்க வைக்க தீயா வேலை செய்து வருகிறார். இந்நிலையில் தனது ரசிகர்களிடம் நேரடியாக கனெக்'ன் வைத்துக்கொள்ள விரும்பிய வைகைப்புயல், தற்போது சமூக வலைதளமான ட்விட்டரில் களமிறங்கிவிட்டார். இவரு ட்விட்டின சில வினாடிகளில் கிட்டத்திட்ட 4000 நபர்கள் வைகைப்புயலை பின் தொடர ஆயத்தமாகினர்.

## "கும்கி" விரனின் சாதனை!



"கும்கி" புகழ் விக்ரம் பிரபுவின் இவன் வேறமாதிரி திரைப்படம் கோலிவுட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இப்படத்தில் விக்ரம் பிரபுவிற்கு ஜோடியாக டெல்லி மாடல் அழகி சுரபி அறிமுகமாகியுள்ளார். கணேஷ் வெங்கட்ராம் மற்றும் "தடையறத் தாக்க" வம்சி கிருஷ்ணா முக்கிய வேடத் தில் நடித்துள்ளனர்.

லிங்குசாமியின் திருப்பதி பிரதர்ஸ் பிலிம் மீடியா நிறுவனத்துடன் இணைந்து யு.டி.வி.மோ'ன் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இப்படத்தை "எங்கேயும் எப்போதும்" புகழ் சரவணன் இயக்கியுள்ளார். சத்யா இசையமைத்திருக்கும் இதன் பாடல்கள் மற்றும் டிரைலர் சமீபத்தில் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. தற்போது கோலிவுட்டில் ஹாட் டாக் என்னவென்றால், இப்படம் வருகிற டிசம்பர் 13ஆம் தேதி கிட்டத்திட்ட 300 திரையரங்குகளுக்கு மேல் தமிழ்நாட்டில் வெளியாகவுள்ளது தான்.

இப்படத்திற்கு தணிக்கை குழுவினரிடம் இருந்து எந்தவித கத்திரியுமின்றி 'A' சான்றிதழ் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

## குண்டுப்பெண்ணாக மாற ஆசைப்படும் தமன்னா



உடல் எடையை கூட்டுவதில் தீவிரம் காட்டி வருகிறாராம் தமன்னா.ஒல்லிக்குச்சி உடம்போடு தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி மொழிகளில் கலக்கி வருகிறார் தமன்னா. இந்நிலையில் திடீரென உடல் எடையை கூட்ட தொடங்கி யுள்ளார். பெரிய ஹீரோக்களுடன் ஜோடி சேர்வதற்காகவே இந்த முயற்சியை எடுத்துள்ளாராம்.

சமீப காலமாக பெரிய ஹீரோக்களுடன் நடிக்க தமன்னாவுக்கு வாய்ப்புகள் வருகிறது.



தமிழில் அஜித் ஜோடியாக வீரம் படத்தில் நடிக்கிறார். இது போல் தெலுங்கு படங்களிலும் மூத்த ஹீரோக்களுடன் ஜோடி சேரும் வாய்ப்புகள் வந்த வண்ணம் உள்ளன. இந்த வாய்ப்புகளை தக்க வைத்து கொள்வதற்காகவே உடம்பை குண்டாக்க ஆசைப்படுகிறாராம் தமன்னா.

## சூர்யாவின் டோலிவுட் என்ட்ரி!

டோலிவுட் ரசிகர்களை நேரடியாக குஷிப்படுத்த களமிறங்கவிருக்கிறார் சூர்யா. நடிகர் சூர்யாவின் படங்கள் தெலுங்கில் நல்ல வரவேற்பையும் வசூ லையும் வாரி குவித்த வண்ணமுள்ளது. இந் நிலையில் சமீபத்தில் ஹைதராபாத்தில் நடந்த பிரியாணி தெலுங்கு பதிப்பின் இசை வெளியீட்டில் பேசிய கே.ஈ.ஞானவேல்ராஜா, சூர்யாவை வைத்து ஏன் நேரடி தெலுங்கு படத்தை எடுக்க முயற்சி செய்ய தயங்குரீங்கன்னு நிறைய ரசிகர்கள் என்னிடம் கேட்டு வருகிறார்கள்.

அதனால், அடுத்த ஆண்டு ஆகஸ்ட்டில் சூர்யாவை வைத்து நேரடி தெலுங்கு படத்தை தயாரிக்க முடிவு செய்துள்ளோம். அதேபோல் இப்படத்தை நிச்சயம் ஒரு முன்னணி தெலுங்கு இயக்குனர் தான் இயக்குவார் என்றும் கூறியுள்ளார்.

இதனால் பூரி ஜெகநாத்தின் இயக்கத்தில் தான் சூர்யா நடிக்கப் போகிறார் என டோலிவுட்டில் தண்டோரா போடப்பட்டு வருகிறது.தற்போது சூர்யா, லிங்குசாமியின் படத்தில் பிஸியாக நடித்து வருகிறார். இதைத் தொடர்ந்து வெங்கட் பிரபு இயக்கத்தில் நடிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொம்மாயி காட்டில் அடைமழை



'பாக்மதி' என்ற புதுப்படத்தில் கமிட்டாகியுள்ளதால் குஷியில் இருக்கி றாராம் அனுஷ்கா. தெலுங்கில் ருத்ரம்மா தேவி, பாஹுபலி என சரித்திர கதைப் பின்னணியில் பிரம்மாண்டமான முறையில் உருவாகி வரும் படங்களில் அனுஷ்கா கதையின் நாயகியாக நடித்து வருகிறார்.

இந்தப் படங்களை தொடர்ந்து 'பாக்மதி' என்ற ஒரு படத்தில் நடிக்கவும் கமிட் ஆகியிருக்கிறார். தெலுங்கில் 'பில்லா ஜமீன்தார' என்ற படத்தை இயக்கிய அசோக் இயக்கும் இந்தப் படமும் பிரம்மாண்டமான முறையில் உருவாக இருக்கிறது.

ஆனால் இந்தப் படம் வழக்கமான கமர்ஷியல் என்டர்டெய்ன்மெண்ட் படம் என்று இயக்குனர் தெரிவித்துள்ளார்.

## ரொமான்ஸ் அஜீத் ரிட்டர்ன்

கௌதம் படத்திற்காக மீண்டும் ரொமான்ஸில் குதிக்கப்போகிறாராம் அஜித். அஜித் - கௌதம் மேனன் படம் பற்றிய அறிவிப்பு எப்போது வெளியானதோ அப்போதிலிருந்து 'தல' ரசிகர்கள் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கௌதம் படம் என்றாலே ரொமான்ஸிற்கு கண்டிப்பாக முக்கியத்துவம் இருக்கும்.ஆனால் அஜித் ரொமான்ஸ் காட்சிகளில் நடித்தே பல வருடங்கள் ஆகிவிட்டது. கடைசியாக கிரீடம் படத்தில் த்ரிஷாவை காதலித்ததோடு சரி, அதன்பிறகு வந்த ஏகன் படத்தில் கூட நயன்தாராவை ஒரு 'மிஷன்' சம்பந்த



மாகவே காதலிப்பதுபோல் கதை சொல்லியிருந்தார்கள்.ஆனால் கௌதம் படத்திற்காக மீண்டும் அஜித் ரொமான்ஸில் குதிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனென்றால் இப்படம் ஆக்ஷன் கலந்த காதல் படமாக இருக்கும் என கௌதம் கூறியிருக்கிறார்.அதனால் இப்படத்தில் 'தல' தன் உடம்பைக் குறைத்து, டை அடித்து பழைய 'க்யூட்' அஜித்தாக மாறப்போகிறாராம். இப்படத்திற்காக பிப்ரவரி 15ம் திகதி தேதி முதல் கால்ஷீட் தந்திருக்கிறாராம் அஜித்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு தொடுதிரைகளைக் கொண்ட ஸ்மார்ட் கைப்பேசி விரைவில் அறிமுகம்



உட்புறமாகவும், வெளிப்புறமாகவும் இரண்டு தொடுதிரைகளைக் கொண்ட ஸ்மார்ட் கைப்பேசியானது எதிர்வரும் நவம்பர் மாதம் அறிமுகப்படுத் தப்படவுள்ளது.YotaPhone எனும் இக்கைப்பேசி தொடர்பாக இந்தவருடம் பெப்பரவ்ரி மாதம் இடம்பெற்ற Mobile World Congress நிகழ்ச்சியில் அறிவிக்கப்பட்டிருந்தது.

கூகுளின் Android 4.2.2 Jelly Bean இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதுடன், 4.3 அங்குல அளவுடைய LCD தொடுதிரைகளைக் கொண்டுள்ளது.இதன் Processor ஆனது 1.7புர்ண வேகத்தைக் கொண்டிருப்பதுடன் பிரதான நினைவகமாக 2GB RAM காணப்படுகின்றது.இவற்றுடன் சேமிப்பு நினைவகமாக 32GB கொள்ளளவு, 12 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 1 மெகாபிக்சலை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா போன்றனவும் காணப்படுகின்றன.

## சிறந்த பயனர் இடைமுகத்தினைக் கொண்ட ஸ்மார்ட் கைக்கடிகாரம்



கைப்பேசி உலகை புரட்டிப்போட்ட ஸ்மார்ட் தொழில்நுட்பமானது தற்போது கைக்கடிகாரங்களையும் விட்டுவைக்கவில்லை.பல நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு ஸ்மார்ட் கடிகாரங்களை உற்பத்தி செய்து அறிமுகப்படுத்திவரும் நிலையில் தற்போது Omate TrueSmart எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கடிகாரமும் இணைந்துள்ளது. Dual Core Cortex A7 1.3புர்ண வேகம் கொண்ட Processor. Android 4.2.2 Jelly Bean இயங்குதளத்தினைக் கொண்ட இக்கடிகாரமானது சிறந்த பயனர் இடைமுகத்தினை கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.இதில் பிரதான நினைவகமாக 512MB RAM. சேமிப்பு நினைவகமாக 4GB என்பன தரப்பட்டுள்ளது.




## ஸ்மார்ட் கைப்பேசிகளை 3D ஸ்கானராக மாற்றும் அப்பிளிக்கேஷன் (Photo)



தற்போது ஸ்மார்ட் கைப்பேசிகளின் தொழில்நுட்பம் அபரிமிதமான வளர்ச்சியை எட்டியுள்ளதுடன், பல்வேறு துறைகளிலும் இவற்றினை பயன்படுத்தக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதே போல சாதாரண ஸ்மார்ட் கைப்பேசிகளை 3D ஸ்கானராக மாற்றும் அப்பிளிக்கேஷன் ஒன்றினை சுவிட்ஸர்லாந்தை சேர்ந்த நிறுவனம் ஒன்று வடிவமைத்துள்ளது. சாதாரண புகைப்படங்களும் முப்பரிமாண காட்சிக்கு மாற்றும் வசதிகொண்ட இந்த அப்பிளிக்கேஷன் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற சர்வதேச கணனி கருத்தரங்கு ஒன்றில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

## கைப்பேசி மூலம் சமையல் செய்யும் தொழில்நுட்பம் அறிமுகம்



கைப்பேசிகளில் உள்ள மின்கலங்களில் இருந்து பிறப்பிக்கப்படும் மின் சக்தியைப் பயன்படுத்தி சமையல் செய்யக்கூடிய தொழில்நுட்பத்தினைக் கொண்ட சாதனம் ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. PowerPot X எனும் இச்சாதனமானது David Toledo என்பவரால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது 10 Watts மின்சக்தியில் இயங்கக்கூடியதாக காணப்படுகின்றது. இதேவேளை ஐபேட் ஒன்று, PowerPot X சார்ஜரின் மூலம் 2 ஸ்மார்ட் கைப் பேசிகள், மற்றும் 4 GoPro கமெராக்கள் ஆகியவற்றினையும் சார்ஜ் செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்

## கம்ப்யூட்டர் வேகத்தை 20 மடங்கு அதிகரிக்கும் 'சிப்' கண்டுபிடிப்பு

நாம் இப்போது பயன்படுத்தும் வெர்சன் கம்ப்யூட்டர் வேகத்தை மிக பல மடங்கு அதிகரிக்கும் தொழில் நுட்பத்தை விஞ்ஞானிகள் கண்டு பிடித்து உள்ளனர். இது தொடர்பாக இங்கிலாந்தில் உள்ள கிளாஸ்கோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினார்கள். அவர்கள் புதிய 'சிப்' ஒன்றை உருவாக்கி உள்ளனர். இதன் மூலம் கம்ப்யூட்டரை அதிவேகமாக செயல்பட வைக்க முடியும். பெர்சனல் கம்ப்யூட்டரில் உள்ள பிராசசர் மைக்ரோ 'சிப்' பில் பொதுவாக 2 அல்லது 4 பாகங்கள் இருக்கும் சில 'சிப்'களில் 16 பாகங்கள் வரை இருக்கும். இப்போது விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள மைக்ரோ 'சிப்'பில் 1000 பாகங்களை உருவாக்க முடியும். இதனால் இந்த கம்ப்யூட்டர் தற்போதைய கம்ப்யூட்டரை விட 20 மடங்கு வேகமாக வேலை செய்யும். இது பெர்சனல் கம்ப்யூட்டராக இருந்தாலும் அதிநவீன கம்ப்யூட்டரை விட சக்தி வாய்ந்ததாக இருக்கும். இந்த கம்யூட்டர் இன்னும் சில வருடங்களில் பயன்பாட்டுக்கு வந்து விடும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.




**"ஆளைப் பிடிச்சாச்சே......"**
**" சேச்சே..... ஆர், ஏன், ஏதுக்கு எண்டுறதே இன்னும் தெரியேல்ல என்று எஸ்.ஐ. சொன்னவர்... சாட்சியத் தேடித் திரியினம் போலக் கிடக்கு" அக் காவல்துறைக்......**

காவலர் அதற்கு மேல் பேசுவதற்கு இடங் கொடுக்காமல் தனது கடமையிடத்திற்கு நகர்ந்து கொண்டார்.

கொல்லப்பட்ட அந்த இளைஞனைப் பார்க்க முடியாமல் அவனது உடலத்தின் மீது துணி போத்தப்பட்டுக் கிடந்தது. அருகில் சாதாரண உடை அணிந்தவர்கள் சிலர் ஆய்வுகளில் ஈடுபட்டிருந்ததை மட்டுமே அந்தக் கத்திக் கடைக்காரரால் காண முடிந்தது.

மறுநாள் செய்திப் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளாக அக் கொலையும் கொலை செய்யப்பட்ட இளைஞனின் புகைப்படமும் வெளியாகியபோது தான் அக் கொலைசெய்யப்பட்ட இளைஞனை அவர் அடிக்கடி அத் தெருவில் சந்தித்தது அவருக்கு ஞாபகம் வந்தது. அச் செய்தியை வாசித்துக் கொண்டிருந்த போது அவரது எண்ணத்தில் அந்தக் கொலையுடன் தானும் ஏதோ ஓர் விதத்தில் தொடர்பு கொண்டிருப்பதாகவே பட்டது. அது என்ன தொடர்பு என்றோ அல்லது எவ்வாறு என்பதையோ அக்கணத்தில் அவரால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் அடுத்த இரண்டு மாதங்களின் பின் தொலைக்காட்சியில் ஒரு உருவத்தைப் பார்த்தவுடன் அவருக்கு, தான் எவ்வாறு அக் கொலையுடன் சம்பந்தப் பட்டிருக்கின்றேன் என்பது தெளிவாகப் புரிந்தது.

அது ஜூன் மாதம் 2012ம் ஆண்டில் ஒரு நாள் இரவு...... அன்று அக்கத்திக் கடைக்காரர் இரவு எட்டு



மணிச் செய்திகளை அவதானித்துக் கொண்டிருந்தார் அவர். அன்று காலையிலேயே அவருக்குச் அச் செய்தி அரசல் புரசலாகக் கிடைத்திருந்தது. எனினும் இரவு எட்டு மணி அரச தொலைக்காட்சிச் செய்தி திருகோணமலைக் கொலை சம்பந்தமாக இருவர் கைது செய்யப்பட்டதாகச் செய்தியறிவித்தது. அதன் தொடர்ச்சியாக அச் சந்தேகநபர்களின் படங்கள் திரையில் காண்பிக்கப்பட்டது. அதைக் கண்ணுற்றவுடன் அவர் அதிர்ந்து போனார்.

அந்த மனிதர்களில் ஒருவனின் முகம் அவருக்கு மிகவும் பரிச்சயமானதாக இருந்தது.

அவனை அவர் ஏதோவோர் காரணத்திற்காக தனது ஞாபகப் பதிவேடுகளில் பொதிந்து வைத்திருந்தார். சிறிய முயற்சியின் பின்னர் அவர் ஞாபகப் பரப்பில் அந்த இளைஞன் வந்து அவரது கடையில் கத்தி வாங்கிச் சென்றது பட்டவர்த்தனமாகத் தெளிவாகியது. மெதுவாக ந[illegible] அவரது [illegible] பொளத்த மத[illegible] கொண்டிருந்த அந்த மனிதன் எப்போதுமே பாவங்களுக்கு அஞ்சியவராகவே இருந்தார்.

அவ்வாறானவரின் கடையில் வாங்கப்பட்ட கத்தியைக் கொண்டு கடைக்கு அருகிலேயே கொலையொன்று நிகழ்ந்திருந்ததால் அக் கொலையுடன் தானும் சம்பந்தபடுத்தப்பட்டு விடுவேனோ? என்றே அவர் அஞ்சினார்.

அவ்வாறான சடுதியான அச்ச உணர்வின் காரணமாகவே அவருக்கு மெல்லிய நடுக்கமொன்று உடலெங்கும் பரவியோய்ந்தது.

பலமான யோசனையின் பின்னர் எது நடந்தாலும் தான் தனக்குத் தெரிந்தவற்றைத் தெளிவாகச் சொல்லி விட வேண்டும் என்ற முடிவுடனேயே அன்றைய இரவுப் படுக்கைக்கு அவர் சென்றார். என்றாலும் கனவுகள் என்னவோ அவரைத் தூங்க விடுவதாக இல்லை........

புலனாய்வாளர்கள் இருவரும் தமது வாகனத்திலிருந்து காளி கோயிலுக்கு முன்னாள் இறங்கிக் கொண்டனர். என்னதான் காதாரண உடை அணிந்து, சாதாரண தோற்றத்தைப் பெற முயற்சித்தாலும் சிறியதொரு மிடுக்கு அவர்களின் தோற்றத்தில் வெளிப்பட்டுக் கொண்டேயிருந்தது.

அவர்களது திட்டமெல்லாம் நேற்றைய மாலையில் எடுத்த முடிவின் படி கத்தி விற்கும் சில கடைகளுக்குச் சென்று சந்தேகம் எழாவண்ணம் விசாரணைகளை மேற்கொள்வதாகவே இருந்தது.

விடை கிடைக்குமா? எனத் தெரியாத போதும் முயற்சியைச் செய்து விடுவது என்றே அவர்கள்



தீர்மானித்திருந்தார்கள்.

காளி கோயிலைத் தாண்டி வரும் முதலாவது கடையாக விளையாட்டுப் பொருட்கள் விற்கும் சிறிய கடையொன்று அவர்களின் கண்களுக்குப் பட்டது.

அதைத் தவிர்த்து மேலும் முன்னோக்கிச் சென்று பெற்றோல் நிரப்பு நிலையத்தை அடைந்தவுடன் அவர்களின் புலன்கள் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கி விட்டன.

பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு அருகில் இலங்கை வங்கியின் நகரக் கிளையைக் கண்டவுடன் அவர்களின் மனக் கண்ணில் தகவல்களின் தொகுப்பு ஒரு சலனப் படத்தை தோற்றுவித்தது. வங்கியிலிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு இருவர் வெளியே வந்து பிரதான வீதியூடாகத் திரும்பாமல் மேலும் முன்னேறி மத்திய வீதிக்கூடாக கத்திக் கடையை நோக்கி அவ்விருவரும் நடை பயிலுவதாகவே அந் நிழற்படம் அவர்களுக்கு உணர்த்தியது.

அதன் படி முதலில் அவ்விரு புலனாய்வாளர்களும் வங்கியின் வாசலுக்குச் சென்று அங்கிருந்து வலது பக்கம் நோக்கி நடந்து மீண்டும் பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு எதிர்ப்பக்கமாக இடது புறம் நோக்கித் திரும்பிய கணத்தில்........

அந்த நடைபாதைக் கடை அவர்களின் கண்களுக்குப் பட்டது. பல்வகைப் பொருட்களுள் அவ்விரு புலனாய்வாளர்களினதும் கவனத்தை அக்கடையில் இருந்த துருப்பிடிக்காத கத்திகளும் (Stainless steel) துருப்பிடிக்கக் கூடிய கொல்லன் கத்திகளும் திருப்பின.

நடைபாதைக் கடையில் கத்தியை வாங்கியிருப்பார்களா அவர்கள்? கேள்வி அவர்களுள் கிளர்ந்த அதே நேரம் .................... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விளையாட்டுக் கழகங்களை பதியுங்கள்

கல்முனை பிரதேசச் செயலகத்தின் கீழுள்ள விளையாட்டுக் கழகங்களை பதிவு செய்யும்படி கல்முனைப் பிரதேசச் செயலர் வேண்டுகோள் விடுத்துள்ளார். விளையாம்டுக் கழகங்களை புணருத்தாரணம் செய்யும் நடவடிக்கையொன்றின் கட்டமாகவே இவ் பதிவுகள் கோரப்பட்டுள்ளன.

பதிவு செய்வதற்கு 2013/14ம் ஆண்டுக்கான கூட்டறிக்கை கழக நிர்வாக தெரிவு அங்கத்தவர் விபரம் 2013ம் ஆண்டின் கூட்ட அறிக்கைகள் போன்றவற்றை சமர்ப்பிக்குமாறு விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.எம்.எம் றஸீன் (067 2229326) கேட்டுள்ளார்.

## விளையாட்டு துறைக்கு சச்சின் அமைச்சராகலாம்: மில்கா சிங் கருத்து



பானாஜி: "மத்திய விளையாட்டு துறை அமைச்சராக சச்சினுக்கு பதவி வழங்கலாம்" என இந்தியாவின் முன்னாள் ஓட்டப்பந்தய வீரர் மில்கா சிங் கூறியுள்ளார்.கோவாவில் நேற்று நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட மில்கா சிங் அளித்த பேட்டி:பாரத ரத்னா விருதுக்கு முழு தகுதியானவர் சச்சின் டெண்டுல்கர். தயான்சந்த்துக்கு பிறகு இந்த விருது பெறும் முதல் விளையாட்டு வீரர் என்ற பெருமையை சச்சின் பெற்றுள்ளார். நாட்டுக்காக அவர் விளையாடி பல பெருமைகளை பெற்றுத் தந்ததற்காக அவருக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

அதே போல, சச்சினுக்கு மத்திய விளையாட்டு துறை அமைச்சர் பதவியையும் வழங்கலாம். சிறந்த விளையாட்டு வீரானால் தான் அந்த பதவிக்கான பொறுப்பை சரியாக நிவர்த்தி செய்ய முடியும். அந்த வகையில், சச்சினுக்கு பதவி வழங்கினால், பொறுப்புடனும், முழு அர்ப்பணிப்புடன் செயல்படுவார்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## ஐ.பி. எல் - செய்த நடைமை?




I.P.l, இது கிரிக்கெட்டை அழிக்க வந்த எமன் என்றே பலர் விமர்சிக்கிறார்கள். T 20 கிரிக்கெட்டால் கிரிக்கெட்டை ரசிக்கத் தொடங்கிய புதிய ரசிகர்கள் தவிர்த்து நீண்டகாலமாக கிரிக்கெட்டை விளையாடியும் சர்வதேசக் கிரிக்கெட்டைப் பார்த்தும் வருபவர்கள் T20 இனை ரசிப்பதில்லை. ஐ.பி. எல். இனையும் சந்தேகத்துடனேயே பார்க்கின்றனர் ... இன்னும் சிலரோ I.P.l இனை Wrestling உடன் ஒப்பிட்டு அதன் பல முக்கிய போட்டிகளின் வெற்றி தோல்வி ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பின்பே விளையாடப்படுகின்றது என்று கூறுகின்றார்கள். ஆனால் அது மிகைப்படுத்தப்பட்ட கூற்று என்றே நான் கருதுகின்றேன்.

நானும் பாரம்பரிய கிரிக்கெட்டின் ரசிகன்தான். இருந்த போதிலும் எவர் என்ன சொன்னாலும் I.P.L. ற்குப் பிறகு இந்திய இலங்கை வீரர்களில் ஒரு முக்கியமான மாற்றத்தை நான் காண்கின்றேன் அது Short ball களை அவர்கள் எதிர்கொள்ளும் விதம். முன்னைய காலங்களில் ஆசிய வீரர்களை ஆட்டமிழக்க வைப்பதற்கு மற்றய நாட்டு வேகப்பந்து வீச்சாளர்களால் பாவிக்கப்படும் ஆயுதம் இந்த Short ball தான்.

பொதுவாக ஆசிய வீரர்கள் ஆசிய பிட்சுகளில் வேகம் குறைந்து வரும் பந்துகளுக்கு ஆடப் பழகியவர்கள். இவர்கள் Shirt ball ரகப் பந்து வீச்சில் 140 - 150 .K.m வேகத்தில் தலையை நோக்கிப் பறந்து வரும் பந்தை எதிர்கொள்ள முடியாமல் திண்டாடுவர். ஆனால் இப்போ அனேகமானோர் போட்டு சாத்துகிறார்கள். சமீபத்தில் இலங்கையும் நியூசிலாந்தும் விளையாடிய போட்டிகளில் டில்சான் உட்பட இலங்கை வீரர்கள் நியுசிலாந்து வீரர்களின் Short ball களை பின்னிப் பெடலெடுத்ததைப் பார்த்த போது சில வருடங்களுக்கு முன்பு வரை அவர்களின் short ball ற்கு எதிரான திண்டாட்டம் நினைவுக்கு வந்தது. இது மிகவும் ஆரோக்கியமான முன்னேற்றம் அல்லது மாற்றம்... இது எப்படி சாத்தியமாயிற்று? பொதுவாக Short ball இனை எதிர்கொள்வதற்கு ஒரு வீரனுக்கு இரு முக்கிய காரணிகள் மிக அவசியம்.

1) மனத்திடம் / உறுதி
2) நேரம்

நான் மேற்குறிப்பிட்ட இரு காரணிகளும் கடும் பயிற்சியின் மூலம் வருபவை. அந்தப் பயிற்சி எப்படி எங்கிருந்து கிடைத்திருக்கலாம் ?

என்னைப் பொறுத்தவரை ஐபி எல்லின் அணிகளுக்காக பல பயிற்சியாளர்கள் தென்னாபிரிக்கா ம்றறும் ஆஸ்திரேலியாவில் இருந்து சென்று பயிற்று வித்தார்கள். அவர்கள் எல்லோருமே வேகப் பந்து வீச்சுடன் வளர்ந்[illegible] அவர்கள் மீண்டும் மீண்டும் கொடுத்த பயிற்சியின் வி[illegible]

## இங்கிலாந்துக் கிரிக்கெட் வீரர்கள் மனத்திடம் இல்லாதவர்களா?


ஆஸ்திரேலியாவுக்கு ஆஸஸ் என்ற பாரம்பரியம் மிக்க கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த இங்கிலாந்து அணியின் வீரர் ஜொனதன் (Jonathan Trot ) தன்னால் தொடர்ந்து கிரிக்கெட் ஆட முடியாது என்றும் அதற்குரிய மனநிலையில் தான் இல்லையென்றும் தெரிவித்ததால் அவரை இங்கிலாந்துக்கு இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை திருப்பியனுப்பியுள்ளது.

ஒரு கிரிக்கெட் அணியில் அந்த அணியின் மூன்றாவது துடுப்பாட்டவீரனே முதுகெலும்பாகக் கணிக்கப்படுவான். அந்தவகையில் இங்கிலாந்து அணியின் மூன்றாவது வீரராக , நம்பிக்கை நட்சத்திரமாக, முதுகெலும்பாகக் களமிறக்கப் படுபவர் இந்த ஜொனதன்தான். அப்படியாக இங்கிலாந்து அணியால் மிகுந்த நம்பிக்கை வைக்கப்படிருந்த ஒருவர் மனப்பிறள்வு அடைவது அந்த அணியின் தன்னம்பிக்கையையே ஆட்டம் காணவைத்துவிடும் அபாயமுள்ளது. இவர் பிறந்தது தென்னாபிரிக்காவில் ஆனால் கிரிக்கெட்டில் இவருக்கு இருந்த திறமை காரணமாகவே இங்கிலாந்தில் குடியேறி அங்கத்தைய பிரஜாவுரிமையும் அந்த நாட்டு அணியில் விளையாடும் கௌரவ வாய்ப்பையும் பெற்றார்.

அவரது ஆட்டத்தை நன்கு படித்து அவருக்கேயுரித்தான களத்தடுப் பாளர்களை நிறுத்தியிருந்த ஆஸ்திரேலிய அணியின் கப்டன் மைக்கல் கிளார்க்கை இங்கே பாராட்டியே ஆகவேண்டும். சில வருடங்களுக்கு முன்னர் இங்கிலாந்தின் கப்டனாக இந்தியாவில் சென்னையில் பிறந்த நாசிர் ஹுசேன் இருந்த போது இங்கிலாந்தின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக இருந்தவர் Marcus Trescothick, ஒருமுறை இங்கிலாந்து அணி இந்திய சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த போது இதே போன்றே மனநிலைப் பிழள்வு ஏற்பட்டு தன்னால் கிரிக்கெட் விளையாட முடியாது எனக் கூறியதனால் இங்கிலாந்துக்கு திருப்பியனுப்பப்பட்டார். சில கால ஓய்வு மற்றும் உளவள மருத்துவத்துக்குப் பின் அணிக்குத்திரும்பிய அவரால் மீண்டும் தாக்குப் பிடிக்க முடியாமல் இளைப்பாறிச் சென்று விட்டார்.

எனவே இதே நிலைதான் ஜொனதனுக்கும் ஏற்படுமா ? இவர் திரும்பி வந்தாலும் கடுமையான சர்வதேசக் கிரிக்கெட்டை இவரால் எதிர்கொள்ள முடியுமா? அப்படி ஏன்தான் இங்கிலாந்து வீரர்களுக்கு இப்படி மனம் சம்பந்தமான பிரச்சினை ஏற்படுகின்றது ? அவர்கள் மன உறுதியற்றவர்களா ? (நன்றி - கிரிக்கட் கிறுக்கன் - முகப்புத்தகம்)

## ஜூனியர் ஹாக்கி: இந்தியா ஏமாற்றம்



புதுடெல்லி: ஜுனியர் உலக கோப்பை ஆண்கள் ஹாக்கி தொடரின் சி பிரிவு லீக் ஆட்டத்தில், தென் கொரியாவுடன் 3-3 என்ற கோல் கணக்கில் டிரா செய்த இந்தியா துரதிர்ஷ்டவசமாக கால் இறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது. டெல்லி, தயான் சந்த் சர்வதேச ஹாக்கி ஸ்டேடியத்தில் நேற்று நடந்த பரபரப்பான இப்போட்டியில், இடைவேளையின்போது இந்தியா 21 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் 31 என முன்னிலை பெற்றும், கடைசி கட்டத்தில் சொதப்பலாக விளையாடி வெற்றி வாய்ப்பை வீணடித்தது. இந்தியா சார்பில் குர்ஜிந்தர் 2 கோல் (32, 35வது நிமிடம்), மன்தீப் ஒரு கோல் அடித்தனர். கொரியா சார்பில் யூ சியூங்ஜு ஹாட்ரிக் கோல் அடித்து (16, 58, 60) இந்திய கனவை தகர்த்தார்.சி பிரிவில் நெதர்லாந்து 9 புள்ளிகளுடன் (3 வெற்றி) முதலிடம் பிடிக்க, கொரியா அதிக கோல் அடிப்படையில் இந்தியாவை முந்தி கால் இறுதிக்கு தகுதி பெற்றது.

## அப்ரிடியின் அதிரடியால் இலங்கையை வீழ்த்தியது பாகிஸ்தான்



இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்டருவென்டி தொடரின் முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றுள்ளது. போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஏஞ்சலோ மெத்திவ்ஸின் அதிரடி அரைச்சதத்துடன் 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை அணி சார்பில் மெத்திவ்ஸ் 50 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 146 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 19.1 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்களால் வெற்றியடைந்தது. பாகிஸ்தான் சார்பில் அப்ரிடி, சர்ஜீல்கான், ஹபீஸ் ஆகியோர் முறையே 39,34,32 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஆட்ட நாயகன் விருதை அப்ரிடி பெற்றுக் கொண்டார்.


சீனக்குடா விமானப்டை ஆண் வீரர்கள் உள்ளக விமானப்படைக் கபடிப் போட்டியில் வெற்றி பெற்று பரிந்து போராடுவோராக (சம்பியன்) பரிணமித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனக் கடலில் உருவாகும் ஈழமக்களுக்கான ஆபத்து

சீனக் கடலில் உருவாகும் ஈழ மக்களுக்கான ஆபத்து தற்போது உலகத்திலேயே பெரும் போர் உருவாகும் ஆபத்து உள்ள இடங்களாக தென் சீனக் கடலும் கிழக்குச் சீனக் கடலும் இருக்கின்றன. பெரும் ஆதிக்கப் போட்டிக்கான எல்லா வியூகங்களும் அங்கு வகுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. உலகி




லேயே பெரும் படைபலப் போட்டியும் படைவலுக் குவிப்பும் இப்போது ஆசியாவிலேயே நடக்கின்றது.

ஈழ மக்களைப் பொறுத்த வரை தம்மைப்பாதிக்கக் கூடிய உலக அரசியல் என்றவுடன் திருக்கோணமலையைத்தான் பெரும்பாலானவர்கள் கருத்தில் கொள்கின்றார்கள். ஆனால் தொழில்நுட்ப வளர்ச்சியும் மிக நீண்ட காலம்தரையில் தரிக்காமல் கடலில் பயணிக்கக்கூடிய அணுவலுவில் இயங்கும் கடற்கலன்களின் உற்பத்தியும் திருகோணமலையின் முக்கியத்துவத்தைக் குறைத்துக் கொண்டிருக்கின்றது.

உலக வர்த்தகத்தின் மூன்றி இரண்டு பகுதி இந்து மாக்கடலினூடாக நடக்கின்றது. அதைக் கட்டுப்படுத்தக் கூடிய சிறந்த இடமாக இலங்கையை அண்டியுள்ள கடற்பரப்பிலும் பார்க்க மத்திய கிழக்கில் உள்ள ஹோமஸ் நீரிணையும் மலேசியாவை அண்டியுள்ள மலாக்காநீரிணையும் இருக்கின்றன.

இலங்கையை அண்டியுள்ள கடற்பரப்பு மிகப் பரந்தது. அங்குவைத்து ஒரு கடற்போக்குவரத்தைத் தடுப்பது கடினம். ஆனால் மிகக் குறுகிய் நீர் வழியான ஹோமஸ் நீரிணையிலும் மலாக்கா நீரிண்ணயிலும் வைத்து தடுப்பது இலகு. இதனால் அமெரிக்கா பாஹ்ரேய்னில் தளம் அமைத்துதனது 5வது கடற்படைப் பிரிவை வைத்துள்ளது.

இப்போது தென் சீனக்கடலில் 90விழுக்காடு கடற்பரப்பை சீனா தன்னுடையவை என்று அடம்பிடிக்கிறது. தென் சீனக் கடலில் உள்ள தீவுகளிற்கு சீனா, ஜப்பான், பிலிப்பைன்ஸ். புஷரூணே, மலேசியா, வியட்னாம், கம்போடியா ஆகிய நாடுகள் உரிமை கொண்டாடுகின்றன. அத்தீவுகளில் உள்ள மீன்வளம், கனிம வளம்மட்டும் இந்த உரிமைப் பிரச்சனையைக் கொண்டு வரவில்லை.

எண்ணெய் வளம் இருக்கிறது என்ற எதிர்பார்ப்பு உரிமை கொண்டாடுபவர்களைத் தீவிரப்படுத்தியுள்ளது. தென் சீனக்கடலில் 213 பில்லியன் பீப்பாய் எண்ணெய் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எரிவாயு 900 ரில்லியன் கன அடி இருக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

1974இலும் 1988இலுன் சீனாவும் வியட்னாமும் ஸ்பிரட்லி தீவுகளுக்காக மோதிக் கொண்டன. பிலிப்பைன்ஸ் வியட்னாமுடனும் மலேசியாவுடனும் மோதக் கூடிய நிலைமைகளும் ஏற்பட்டிருந்தன. தென் சீனக் கடலானது பசிபிக் பெருங்கடலுக்கும் இந்துப் பெருங்கடலுக்கும் இடையில் இருக்கும் 3.6 மில்லியன் சதுர கிலோமீட்டர் கடற்பரப்பாகும்.

இது வடக்குத் தெற்காக 1800 கிலோ மீட்டர் நீளத்தையும் கிழக்கு மேற்காக 900 கிலோ மீற்றர் நீளத்தையும் கொண்டது. தென் சீனக் கடலில் பல குட்டித் தீவுகள் உள்ளன. இவற்றில் பல தீவுகள் கடல் பெருக்கெடுக்கும் போது முற்றாக நீரில் மூழ்கிவிடும். கிழக்குச் சீனக் கடலில் உள்ள தீவுகள் யாருக்கு சொந்தம் என்பதில் சீனாவிற்கும் ஜப்பா னுக்கும் இடையிலான முறுகல் நாளுக் குநாள் மோசமடைந்து கொண்டே போகி ன்றது. சீனாவிற்கு எதிராக அமெரிக் காவும் களமிறங்கிவிட்டது என்பதை நவம்பர் 24-ம் திகதியில் இருந்து நடப்பவை உறுதி செய்கின்றன.

கிழக்குச் சீனக் கடல் வான் பரப்பில் பெரும் பகுதியை சீனா தனது வான் பாதுகாப்பிற்கு உட்பட்ட வலயம் என 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது. இந்த வான் பரப்பு சீனாவும் ஜப்பானும் தமது எனச் சொந்தம் கொண்டாடும் சென்காகு அல்லது டயோயு தீவுக் கூட்டங்களையும் உள்ளடக்கியது என்பதால் உலக அரங்கில் ஒரு பெரும் அதிர்வலை உருவானது.

இதற்குப் பதிலடி கொடுக்கும் முகமாகநவம்பர் 26-ம் திகதி முற்பகல் 11.00 இல் இருந்து பிற்பகல் 1.22 வரை அமெரிக்கா தனது இரு பி-52 போர் விமானங்களை சீனா அறிவித்த வான் பாதுகாப்பு வலயத்திற்குள் பறக்கவிட்டது.

இது சீனா தனது வான் பாதுகாப்பு வலயம் என அறிவிக்க முன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட பறப்பு என்கின்றது அமெரிக்கா. அமெரிக்க விமானங்கள் மேற்குப் பசுபிக் கடலில் உள்ள குவாம் கடற்படைத் தளத்தில் இருந்து கிழக்குச் சீனக் கடலில் தமது பறப்புக்களை மேற்கொண்டன.

இப்பறப்புக்கள் பற்றி அமெரிக்கா சீனாவிற்கு எந்த முன்னறிவிப்பையும் செய்யவில்லை. சீனா அறிவித்த வலயம் சீனத் தரையில் இருந்து 500 மைல்கள் வரை நீள்கின்றது. சீனா ஒக்டோபர் மாதம் தனது நீர்மூழ்கிக் கப்பல்களின் பலத்தை உலகி ற்குக் காட்டியது.

அதைத் தொடர்ந்து தனது சந்திரனில் தளம் அமைக்கும் திட்டத்தையும் உலகிற்குப் பறை சாற் றியது. இந்த இரு நிகழ்வுகளிற்கும் இடையில் சீனா தனது வான் பாதுகாப்பு வலயப் பிரகடனத்தைத் திட்டமிட்டுச் செய்தது.

ஜப்பானிற்கு ... கடப்பாட்டில் அமெரிக்கா இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் தோற்கடிக்கப்பட்ட பின்னர் ஜப்பான் ஒரு தாக்குதல் படையை தன்னிடம் வைத்திருக்க முடியாது என்றும் அது ஒரு பாதுகாப்புப் படையை மட்டும் வைத்திருக்கலாம் எனவும் ஜப்பானின் பாதுகாப்பிற்கு அமெரிக்கா உத்தரவாதம் என்றும் ஜப்பானில் அமெரிக்கப் படைகள் தளம் அமைத்துத் தங்கியிருப்பதற்கும் ஜப்பானும் அமெரிக்காவும் ஒத்துக் கொண்டன.

இந்த ஒப்பந்தம் 1952இல் கைச்சாத்திடப்பட்டு பின்னர் 1960இல் திருத்தம் செய்யப்பட்டது. அதன் படி இரு நாடுகளும் ஒன்றிற்கு ஒன்று படைத்துறை ஆபத்து வரும்போது இரு நாடுகளும் ஒத்துழைக்கும் ஜப்பானிய நிர்வாகத்திற்கு உள்பட்ட பிராந்தியங்கள் ஆபத்திற்கு உள்ளாகும் போது அமெரிக்கா ஜப்பானைப் பாதுகாக்கும்.

இதனால் சென்காகு தீவைப் பாதுகாகக வேண்டிய பொறுப்பு அமெரிக்காவிர்கு உண்டு. பிரித்தானியாவும் ஜப்பானும் 2013.ம் ஆன்டு பாதுகாப்பு உபகரண ஒப்பந்த்ம் செய்துள்ளன. இன்று (02.12.2013) ஜப்பானியப் பாதுகாப்புத் துறைஅமைச்சர் பிரித்தானியக் கடற்படைத் தளபதியை சந்தித்து ஜப்பனின் மீது ஒருதலைப்பட்சமான தாக்குதல் நடக்கும்.

போதுபிரிதானியா ஜப்பானைப் பாதுகாக்க களத்தில்இறங்கும் என உறுதியளிட்துள்ள அதே வேளைபிரித்தானியப் பிரதமர் சீனாவில் வர்த்தக ஒத்துழைப்பு தொடர்பாக உடன்பாட்டை எட்டியுள்ளார்.

சீனாவும் தனது ஒரு தலைப்பட்சமாக நிர்ணயித்த வான் பாதுகாப்பு வலயத்திற்கு தனது SU-30 மற்றும் J.11 போர் விமானங்களையும் KJ-2000 வான் சார் கதுவி விமானங்களையும் அனுப்பியுள்ளது. சீனா 24-11-2013 கிழக்குச் சீனக் கடலில் பத்து இலட்சம் சதுர மைல் வான்பரப்பை தனது பிரதேசம் எனப் பிரகடனப் படுத்தி அதற்குள் பறக்கும் விமானங்கள் தனது அனுமதியைப் பெறவேண்டும் என்றும் அல்லது அவற்றின் மீது அவசர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்தது.

நீர்மூழ்கிகளை வேட்டையாடும் விமானங்களை அனுப்பிய் அமெரிக்கா நவம்பர் 24ம் திகதி 'கிழக்குச் சீனக் கடலில் உருவான பதட்டத்தைத் தொடர்ந்து செய்யப்படும் முதல் படை நகர்வாக அமெரிக்கா தனது நீர்மூழ்கிகளை வேட்டையாடும் விமானங்களை ஜப்பானிற்கு அனுப்பியுளது.-8 எனப்படும் இந்த விமானங்கள் torpedoes எனப்படும் ஏவுகணைகளையும் புதுரக கதுவிகளையும் (ராடார்) கொண்டுள்ளன. போர் மூளுமா?

ஒரு போர் மூளும் ஆபத்து இருந்தால் உலகச் சந்தையில் தங்கத்தின் விலை சடுதியாகஅதிகரிக்கும். பங்குகளின் விலைகள் சரியும்.அப்படி எதுவும் இதுவரை நடக்கவில்லை.

எந்த ஒரு நாடும் படைகளை நகர்த்தியதாக தகவல்கள் இல்லை. சீனா தொடங்கிய இந்த முறுகல் நிலையில் அது தோற்றுவிட்டதாக சீன மக்கள் உணர்வதை சீன ஆட்சியாளர்கள் விரும்ப மாட்டார்கள். சீனா தனது வான் பாது காப்பு அறிவிப்பைதிரும்பப் பெற மாட்டாது. மாறாக இந்த அறிவிப்பை தொடர்ந்து வலியுறுத்தாமல் நாளடைவில் அது நீர்த்துப் போகும்.

ஆனால் சர்ச்சைக்குரிய தீவுக் கூட்டங்கள் தொடர்பான முறுகல்கள் நாளுக்கு நாள் ஒரு போரை நோக்கி வலுத்துக் கொண்டே போகும் போர் ஒன்று உரு வாகுவதைத் தடுக்கும் வகையிலும் ஜப்பானிற்கு தனது ஆதரவைத் தெரிவிக்கும் வகையிலும் அமெரிக்கா தனது துணை அதிபர் ஜோபிடனை ஜப்பானிற்கும் சீனாவிற்கும் அனுப்பியுள்ளது.

ஜப்பானிற்கும் சீனாவிற்கும் இடையில் நடக்கும்முறுகலில் அமெரிக்காவும் தலையிடுவது முழு ஆசியப் பிராந்தியத்திலும் ஒரு பதட்ட நிலையை உருவாக்கியுள்ளது. சீனாவின் விரிவாக்கக் கொள்கைகளால் ஏற்படும் ஆபத்தை பல ஆசிய நாடுகள் கரிசனையில் கொண்டுள்ளன.

சீனாவின் விரிவாக்கற் கொள்கை தென் சீனக் கடலிலும் கிழக்குச் சீனக் கடலிலும் மட்டுமல்ல இந்தியாவின் அருணாசலப் பிரதேசத்தையும் இலக்கு வைத்துள்ளது. 1949-ம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தின் விரிவாக்கற் கொள்கை க்கு எதிராக நேட்டோ எனப்படும்.

வட அந்திலாண்டிக் நாடுகளின் ஒப்பந்தம் செய்யப்பட்டது போல்ஆசிய நாடுகள் ஒன்று கூடி ஒரு படைத்துறை ஒப்பந்தத்தை செய்யும் சாந்தியம் உண்டு.

இப்படியான ஒரு அணியில் ஜப்பான், இந்தியா, அமெரிக்கா, ஒஸ்ரேலியா, பிலிப்பைன்ஸ். புஷரூணே, மலேசியா, வியட்னாம், கம்போடியா, சிங்கப்பூர் ஆகியவை இணைந்து நேட்டோவைப் போல் ஒரு படைத்துறை மற்றும் அரசியல் கூட்டணியை அமைக்கும் வாய்ப்புக்கள் அதிகமாகிவிட்டது.

சீனாவும் வார்சோ ஒப்பந்த நாடுகள் போல் தன்னுடன் வட கொரியா மற்றும் மொங்கோலியா போன்ற சில மத்திய ஆசிய நாடுகளைத் தன்னுடன் இணைத்து ஒரு படைத்துறைக் கூட்டமைப்பை அமைக்க முயலலாம். முதலாவது அணியில் இரு முக்கிய நாடுகளில் ஒன்றான ஜப்பான் எப்போதும் சிங்களவர்களுக்கு ஆதரவாகவே நடந்து கொள்ளும்.

மற்ற நாடான இந்தியா எப்போதும் தமிழர்களுக்கு எதிராகவே நடந்து கொள்ளும். இந்தியா தனது நாட்டில் உள்ள அதிகாரப்பரவலாக்கத்திலும் அதிக மான அதிகாரப் பரவலாக்கத்தை ஈழத் தமிழர் பெற்று விடக்க் கூடாது என்பதில் எப்போதும் உறுதியாக நிற்கும். இரண்டாவது அணியில் சீனா சிங்கள வர்களின் ஆதரவாகச் செயற்படும்.

இரண்டு அணியும் இலங்கையைத் தம் பக்கம் இழுக்கும் போட்டியில் ஈழத் தமிழர்களுக்கு எதிரான நிலைப் பாட்டைப் போட்டி போட்டுக் கொண்டு செய்யலாம். அப்போது ஈழத் தமிழர்களின் நிலை ஒரு அநாதையின் நிலையை அடையுமா

ஒரு பத்திரிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - தமிழ் மொழியும் இலக்கியமும் 1



08. உரையாடல் ஒன்றறை எழுதும் போது எழுத்துவழக்கிலேயே எழுத வேண்டும்.இக்கருத்தை ஏற்றுக் கொள்வீரா? காரணம் தருக?

09. நேர்முக வருணனையாளன் ஒருவனுக்கு தான் வருணிக்கும் நிகழ்ச்சி பற்றிய முன்னறிவு அவசியமானது - இதனை ஓர் உதாணமூலம் விளக்குக?

10. மாலை + முன்றில் + குறுமை + கால் + கட்டில்

11. நீ – தோன்றா எழுவாய் தாராயோ – பயனிலை

12. கிறுகி – திரும்பி திரும்ப சுழன்று

கிழக்குப்பிரதேசத்தில் வழக்கில் உள்ளது.இச்சொல் மட்டக்களப்பு பிரதேசத்தில் வழக்கில் உள்ளது.

13. காடுகள் பயிர் செய்வதற்கென மக்களால் அழிக்கப்பட்டன.செயற்பாட்டு வினை விகுதி – படு

14. “ஆரது? வைரமுத்துவின் குரல் போல இருக்கு” என்று விதானையார் கேட்டார்.

15.கலை – பெயர் - கலைகள் கலைமான் சேலை

வினை – கலைத்தல்

பெயர் - கலைகளில் கடவுள் உறைவார்

வினை – மத்திய மாகாண சபை கலைக்கப்பட்டது.

16.கூறியது கூறல்உதாரணந் தருதல்

17.உறவுமுறைக் கடிதம் :- விளிப்பு இயல்பானதாக இருக்கும் / உறவைக்காட்டும் -அன்பு நண்பா! உத்தியோகபூர்வக் கடிதம்:- விளிப்பு நியமமானது /உத்தியோக நிலைகளைச் சுட்டும் அதிபர், றோயல் கல்லூரி, கொழும்பு.

18.இல்லை உரையாடல் என்பது இருவருக்கிடையே இயல்பாக நடைபெறுவதாகும். எனவே உரையாடல் பேச்சு வழக்கிலும் இடம்பெறலாம்.

19.நேர்முகம் செய்யப்பட வேண்டிய விடயம் பற்றிய முன்னறிவு அவசியம்.

உ-ம்:-திருவிழா, விளையாட்டுப்போட்டி, கிரிக்கட்போட்டி

**பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவசெய்து 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்திற்க பொருத்தமான தலையங்கம் இடுக.**

**(அ)** இலங்கையில் தமிழ் சிங்களம் ஆங்கிலம் ஆகிய மொழிகள் பேசப்படுகின்றன. தொடர்பாடல் இனங்களுக்கிடையேயான நல்லுறவு கல்வியறிவு ஆகியவற்றை வளர்த்துக் கொள்வதற்கும் சர்வதேசத்துடன் உறவுகொண்டு ஐக்கியத்தை வளர்ப்பதற்கும் பன்மொழி அறிவு இன்றியமையாததாகும் என்ற கருத்துப் புலப்படும் வகையில் ஒரு விளக்கக்கட்டுரை.

**(ஆ)** தகவல்தொடர்பாடல் தொழிநுட்பத்தின் ஓர் அங்கமே இணையத்தளமும் செல்லிடத் தொலைபேசியும் ஆகும். இவற்றால் நாம் அனுகூலங்களைப்பெறும் அதேவேளையில் பிரதிகூலங்களையும் எதிர் கொள்கின்றோம். இவற்றைக் கருத்தில் கொண்டுஇருவருக்கிடையே இடம்பெறும் ஓர் உரையாடல்.

**(இ)** இன்றைய இளைஞர்கள் உணர்ச்சி வசப்படுபவர்கள் நாகரிக மோகம் கொண்டவர்கள் சமூகஅக்கறை அற்றவர்கள். என்ற இளைஞர் சமுதாயத்தின் மீது சிலர் குற்றம் செலுத்துகின்றனர். இது உண்மைக்குப் புறம்பானது ஆதாரமற்றது என்ற கருத்துக்களை முன்வைத்து நீர் நிகழ்த்தும் விவாதம்.

**(ஈ)** அவன் நன்றாக உழைத்துச் சம்பாதித்தான். பணம் சேர்ந்தது. எனினும் அத்தியாவசியத் தேவைகளுக்குகூட செலவழிக்க அவன் மனம் விரும்பவில்லை மனைவி பிள்ளைகளின் அன்றாடத் தேவைகளைக்கூட அவன் நிறைவேற்றவில்லை.........ஆனால் நடந்தது என்ன? “ஈயார் தேட்டை தீயார் கொள்வார்” என்ற படிப்பினை புலப்படும் படியாக ஒரு சிறுகதை.

வினா இல:- 02 கட்டுரை எழுதுதல்

(அ) பொருளமைவும் அளவும்

(ஆ) கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும்

(இ) கட்டுரை நுட்பங்கள்

(ஈ) தலையங்கம்

ஆசிரியர் : அ.ரவீந்திரன் B.A (HONS) TAMIL SP[illegible]
உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன தமிழ்ப் பாட ஆசிரியர்

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - கணிதம், 11



01) 8% பங்குலாபம் வழங்கும் கம்பனி ஒன்றின் ரூபா 8 பங்குகளை 25% சமத்திலும் கூடிய விலையில் வாங்குவதற்கு குமணன் 11000 ரூபாவை முதலீடு செய்தார்.

(i) ஒரு பங்கை வாங்கிய விலை என்ன

(ii) பங்குலாபம் என்ன?

02) (i) $(x + 1/x)^2$ இன் விரிவை எழுதுக.

(ii) $x^3 + (1/x)^3$ ஐ காரணிப்படுத்துக.

(iii) $x + 1/x = 3$ எனின் , $x^2 + (1/x)^2$ , $x^3 + (1/x)^3$ என்பவற்றின் பெறுமானத்தைக் காண்க.

03) $y = (x - 3)^2$ என்னும் வரைபில் ,


(i) சமச்சீர் அச்சின் சமன்பாடு யாது?

(ii) இழிவுப் பெறுமானம் யாது?

(iii) திரும்பற்புள்ளியை காண்க.

(iv) $y + 5 = (x - 3)^2$ என்னும் வரைபின் இழிவுப் பெறுமானத்தை உய்த்தறிக.


04) திரிகோண கணித அட்டவனையை பயன்படுத்தி




(i) x , y ஐ காண்க.

(ii) è இன் கோணத்தைக் காண்க.

05)




(i) ஒரே எண் தோன்றுவதற்கான நிகழ்தகவைக் காண்க.

(ii) சதுரமுகி தாயக்கட்டையில் முக்கோண எண் கிடைப்பதை A என குறிக்க.

(iii) நான்முகி தாயக்கட்டையில் 3 இன் மடங்கு கிடைப்பதை B என குறிக்க.

(iv) A, B சாரா நிகழ்ச்சி என காட்டுக.

கணிதம் வழிகாட்டல் -
திருமலையின் பிரபல ஆசிரியர் T.குமணன்

**பத்திரிக்கையில் வெளியாகும் பாடகணித வினாத்தாளில் ஏற்படும் தவறுகளுக்கு மலைமுரசே காரணம் ஆசிரியர் அல்ல.**

**MATHS**

**2014** ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.

**Year 06 , 07 , 08 , 09 , 10 & G.C.E(O/L) G.C.E(O/L)**
மாணவர்களுக்கு, பிரதி சனிக்கிழமை தோறும் Test நடைபெறும். ஞாயிறு தோறும் Paper class நடைபெறும்.

Sir : **T. Kumanan*0772975953***
23, Sivan St.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 200 ஹெக்டேயரில்.....

முதலீட்டு அபிவிருத்திச் சபைத் தகவல்களின் படி 2014ம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ள இவ் ஏற்றுமதி வர்த்தக வலயம் போன்று நாடு முழுவதும் மேலும் 7 வர்த்தக வலயங்கள் அமைக்கப்படவுள்ளன எனத் தெரிகின்றது.

திருகோணமலை வலயமே ஏற்றுமதி ஊக்குவிப்புடன் கூடயதாக அமையவுள்ளது. கடல், வான் போக்குவரத்துக்களை இலகுவாக மேற்கொள்ளும் வாய்ப்பு கிழக்கிலுள்ளமையே இதற்குக் காரணம் ஆகும்.

மிகப் பெரிய வர்த்தக வலயமானது வவுனியாவில் சுமார் 400 ஹெக்டேயர் நிலப்பரப்பில் உருவாக்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கு நோக்கி வர்த்தக முதலீடுகளை கவரும் நோக்குடன் உருவாக்கப்படும் இவ்வலயங்களில் ஊழியச் செலவு வடக்கிலும் கிழக்கிலும் குறைவாக இருப்பதால் பல பாரிய நிறுவனங்கள் இவ் வலயங்களை நோக்கி நகரும் வாய்ப்பிருப்பதாக முதலீட்டுச் சபை மேலும் தெரிவித்துள்ளது.

## காணாமற்........

மற்றும் நடுத்தர வயதைக் கடந்த பெண்களுடன் காணாமற் போனோரைக் கண்டறியும் குழுவின் ஏற்பாட்டாளர் சுந்தரம் மகேந்திரன் உட்பட மாகாணசபை உறுப்பினர்களான நாகேஸ்வரன் மற்றும் ஜெனார்த்தனன் ஆகியோருடன் முன்னால் தம்பலகாமம் பிரதேசசபை உறுப்பினர் திருச்செல்வமும் அங்கிருந்துள்ளனர்.

ஆரம்பத்தில் பிரதான சந்தையிலிருந்து வந்த முகம்மூடி அணியாத நபரொருவர் சாத்வீக போராட்ட மக்களை கலைந்து செல்லும்படி மிரட்டியுள்ளார். மக்கள் கலைந்து செல்லாதபடியால் அந் நபர் கைத்தொலைபேசியூடாக அழைப் பெடுத்த அடுத்த கணத்தில் பெருமளவானோர் அவ்விடத்திற்கு வருகை தந்துள்ளனர்.

முன்னரே திட்டமிட்ட முறையில் எங்கோ காத்துக்கொண்டிருந்த அவர்கள் இந் நபரின் அழைப்பையடுத்தே அவ்விடத்திற்கு வந்துள்ளனர்.

வந்தவர்கள் பெண்களை தள்ளும் சாக்கில் கீழ்தரமாக நடக்க முற்பட்டதுடன் கீழ்த்தரமான வசைமொழிகளையும் பிரயோகித் துள்ளனர்.

காவல்துறையினர் ஆரம்பத்தில பார்வையாளர்களாக இருந்து விட்டுப்

## இலங்கையில்.......

நீர்கொழும்பு, மொறட்டுவை மற்றும் மவுண்ட்லவேனியாப் பிரதேசங்களில் வதிகின்றார்கள். இப் பாகிஸ்தானிய கத்தோலிக்கர்கள் என இலங்கைப் பேராயர் தரப்புச் செய்தி தெரிவித் துள்ளது. பாகிஸ்தானில் இருந்து தப்பியோடியுள்ள இவர்களை மற்றொரு நாட்டில் குடியமர்த்தும் வரை இடைத்தங்கல் இடமாகவே இலங்கையை பாவிப்பதாக ஐ.நாவின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராஸயம் தெரிவித்துள்ளது.

பேராலயத் தகவல்களின்படி இவ்வாறு வதிபவர்கள் ஒரு வருடங்களுக்கு மேலாக வசித்து வருவதாகவும், அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ள வதிவிட அனுமதியின்படி அவர்களால் இலங்கையில் வேலை செய்ய முடியாது என்றும் தெரிவிக்கிறன. மேலும் ஓடுவதாகவும், சிலர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பிச்சை எடுப்பதாகவும் மேலும் தெரிவி க்கின்றன.

## பன்குளத்தில்.....

உள்ளூர்வாசிகள், யானையைக் கண்டவுடன் தகரங்களைத் தட்டி சத்தம் எழுப்பினால் அவை ஓடிவிடும். ஆனால் தற்போது வந்துள்ள யானைகளோ தகரத்தில் தட்டியவுடன் உணவுக்காக வீடுகளைத் தேடி வருவதைக் காண முடிகின்றது எனத் தெரிவித்தனர்.

இதனால் தகரத்தைத் தட்டியவுடன் சாப்பாட்டிற்கு வரும் வகையில் அவை பழக்கப் பட்டிருக்கின்றன எனவும் அவர்கள் சந்தேகம் வெளியிட்டனர்.

## புனர்வாழ்வளித்த...

கீழ் கைதாகி 2012 வரை புனர்வாழ்வுத் தடுப்பிலிருந்து விடுதலையான அமலதாஸ் மீண்டும் 2013ல் கைது செய்யப்பட்டு விசாரணைகள் ஏதுமின்றித் தடுத்து வைத்திருப்பதாக நீதிமன்றில் அவர்சார்பில் கூறப்பட்டது. அவ்வாறு ஏன் தடுப்பிடப்பட்டுள்ளார் என அரச சட்டவாதியிடம் கோரியபோது சந்தேக நபரைத் தடுத்து வைத்திருக்கும் இடம் தனக்குத் தெரியாது என அரச சட்டவாதி மன்றில் தெரிவித்தார்.

எதிர்வரும் 20ம் திகதி மனுதாரர் கைது செய்யப்பட்ட காரணத்தை முன்வைக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

பின்னரே அனைவரையும் கலைந்து போகச் செய்தார்கள் என திருச்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

கைகலப்பைத் துாண்டிய வர்களைக் கைது செய்யுமாறு தான் கோரிய போதிலும் அதற்குரிய நடவடிக்கைகளை காவல்துறை அக்கணத்தில் எடுக்கவில்லை என்றும் தான் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட பின்னர் என்ன அங்கு நடந்தது என்பது தனக்குத் தெரியாது என்றும் அவர் தெரிவித்தார்.

மனித உரிமை தினத்தில் நடந்த இச் செயல் கண்டனத்துக்குரியது என ஆர்வலர்கள் தெரிவித்தனர். (உ-அ-கீ)

## உள்நாட்டுப்.............

உருவாகும் என்பதுடன், அவ்வா றான தலையீடுகள் இலங்கையின் இறையாண்மையின் மீது கடும் ஆபத்தை விளைவிக்க கூடியவையாகவும் இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதேவேளை பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வந்து பேச்சு வார்த்தைகளை நடத்த வேண்டும் என் றார்.அனைத்துவிதமான சித்திரவதைகள், ஆட்கடத்தல்கள் மற்றும் மக்கள் காணாமல் போதல் ஆகியவைகள் தடுக்கப்படவேண்டும் என்றும் தமிழ்ச் சிறுபான்மையினரின் கோரிக்கைகள் குறித்து ஒரு அரசியல் தீர்வு காணப் படவேண்டும் என்றும் கோரியுள்ள அக்கடிதத்தில் அரசியல் சட்டம் சனாதி பதிக்கு மிக அதிக அதிகாரங்களைத் தந்திருக்கிறது என்றும், அதனால் இந்த அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும் என்றும் கோரியிருக்கின்றார்கள்

இலங்கை நீதிபதிகளின் சுதந் திரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியி ருக்கிறது என்று கூறும் இந்தக் கடிதம், ஊழல் , தேர்தல்கள் மற்றும் மனித உரிமைகள் ஆகிய விடயங்களில் அரசியல் தலையீடு இருக்கிறது என்றும் கூறியிருக்கிறது.நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு அமல்படுத்த வேண்டும் என்றும், இவ்வாறு செய்தால் மட்டுமே, சர்வதேச அழுத்தங்களை [illegible] கொழும்பு [illegible] கூறியிருக்கிறார்.

## அகற்றப்பட்டதா.........

உறுப்பினர்களும் உள்வாங்கப் பட்டிருந்தனர். தற்போது ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி நடைபெற்று முடிந்த மாகாணசபைத் தேர்தலில் அனைத்து இடங்களிலும் தோல்வியடை ந்துள்ளது. அத்துடன் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் இருந்து மாறுபட்ட கருத்துக்களை கொண்டுள்ளதால் வெளியேற்றப்பட்டுள்ளது என" ஜே.வி.பி இணையம் தெரிவித்துள்ளது.

## கிழக்கு பல்கலைக்.....

இந் நிலையில் கருத்துத் தெரிவித்த உபவேந்தர் கலாநிதி. கிட்னண் கோபிந்தராஜா "முப்பது வருட கால யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட எமது பல்கலைக்கழகத்தினை சிறப்பான முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற உறுதியான மனத்தோடு அரசாங்கத்துடனும் உயர்கல்வி அமைச்சருடனும் உரியமுறையில் சந்திப்புக்களை மேற்கொண்டு அதற்கான நிதி ஒழுங்குளைப் பெற்று அபிருத்தி செய்கின்றோம்.

அபிவிருத்தி என்று ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு பத்து ரூபாய் எடுத்திருந்தேன் என்பதை நிருபித்தால் எனது பதவியில் இருந்து விலகிக் கொள்ளத்தயார். அதனை விடுத்து போலியான தகவல்களைக் கொண்டு அண்மையில் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஆற்றிய உரை வேதனையளிக்கின்றது" என்றார். (சச்சு)

## மகிந்த அவர்களை...

தெரிவித்துள்ளார். தமிழ் மக்களோ, முஸ்லிம் மக்களோ இந்நாட்டில் சனாதிபதியாக வரமுடியாது. ஆனால் யார் சனாதிபதியாக வரவேண்டும் என்பதை தீர்மானிக்கலாம். எனவே இம் மாவட்ட மக்கள் திடமான சிந்தனையுடன் வாக்களித்து மஹிந்த ராசபக்சவை மீண்டும் சனாதிபதியாக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

## வாழ்வெழுச்சி......

நாடெங்கிலும் உள்ள மக்களுக்கு சுமார் 8005 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

வாழ்வின் எழுச்சித் திட்டம் ஊடாக 28 லட்சம் சுயதொழிற் குடும்பங்களுக்கே இத்தொகை கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## சர்வதேச...........

தமிழ் இனத்தின் மீது பரவலாகவும், நுட்பமான முறையிலும் தாக்குதல்களை தனது காவல்துறை மற்றும் ஏனைய பலம் வாய்ந்த அமைப்புக்களைக் கொண்டு, அரச தந்திரோபாயத்திற்கு அமைவாகத், தாக்குதலை மேற்கொண் டுள்ளது" என்பது தெளிவாவதாகத் தெரிவித்துள்ளது. மேற்படி காவல்துறை அலுவலர், தான் 2003ம் ஆண்டு தொடக்கம் 2007ம் ஆண்டு வரை காவல் துறையின் விசேட படையணியில் கடமை புரிந்ததாகவும் அக்காலப் பகுதி யில் அப் படையணியானது தமிழ்ப் பொதுமக்களைக் கடத்தும் பணியை மேற்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அத் தகவல்களை வெளியிட்ட வர்களில் தானும் ஒருவர் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாலேயே தான் நாட்டை விட்டுத் தப்பியோடியதாகவும் தனதுயிருக்கு அரசாங்கத்தினாலோ அல்லது அரசாங்கத்திற்குத் தகவல் வழங்கும் பாதாளக் குழுக்களாலோ ஆபத்துள்ளதாகவும் அவர் தனது அகதிக் கோரிக்கையில் குறிப்பிட் டுள்ளதாக கொழும்பு டெலிகிராப் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

## 15 பவுன் தடை.....

செல்ல முடியும் என்ற வரையறையைக் கடந்த வாரமளவில் சுங்கத் திணைக்களம் அறிவித்திருந்தது. அத் தடையே தற்போது நீக்கப்பட்டுள்ளதாக அத் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

## புனித நிக்கலஸ்........

மாவட்ட இந்து இளைஞர் பேரவைதலைவருமானசீ.யோகேஸ்வரன், அருட்தந்தை இருதயராஜ், அருட்தந்தை அன்டனிதாஸ், பங்குத்தந்தை ஞா.மகிமைதாஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் போது ஐம்பதாவது ஆண்டு நினைவுப் படிவத்தை பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் திரை நீக்கம் செய்து வைத்தார். இங்கு பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனுக்கு பங்குத்தந்தை ஞா.மகிமைதாஸினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக் கப்பட்டது.

பின்னர் யாழ்ப்பாணம் பருத்தித் துறை பொற்பதி குடத்தனை கிராமத்தை சேர்ந்தவரும், தற்போது சுவிஸ்லாந்து நாட்டில் வசிப்பவருமான ஞானசீலன் ஜோன் ஞானச்சந்திரன் என்பவரால் பாராளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்பட்ட நிதி மூலம் நத்தார் ஆடைகள் இதன் போது வழங்கி வைக்கப்பட்டது.

## அன்று அமரர்............

என்பதை இன்று நேற்றல்ல கடந்த 30 வருடங்களுக்கு முன்னரே தெரிவித்திருந்தோம். இதன் தேவை கருதி இந்த விடயம் சம்பந்தமாக கடந்த 31.03.1989ல் அமரர் அமிர்தலிங்கம் அவர்களால் கொழும்பில் ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அதில் அப்போதைய அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஜனாப் எ.ஆர்.மன்சூர், அமரர் எம்.எச்.எம்.அ'ரப் ஆகியோர் கலந்து கொண்டு பிரதேச செயலகம் அமைய வேண்டிய தேவை இருப்பதாகவும் இதனால் சமூகங்களு க்கிடையே எந்த வேற்றுமைகளும் வருவதற்கு வாய்ப்பு இல்லை, இனம் ஒற்றுமையாகவே இது ஒரு தீர்வாகும் என எல்லோரும் ஏக மனதாக முடிவெடு த்திருந்தனர்.

இதை தற்போதைய முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அறியாமல் இருக்கலாம்.அமரர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் கொள்கையை ஏற்று நடப்பதாக அடிக்கடி அறிக்கைவிடும் இவர்கள் ஏன் இந்த விடயத்தில் மட்டும் எதிராக இருக்கின்றார்கள். என அவ்வறிக்கை தெரிவித்துள்ளது.

## கிழக்கு மாகாண..........

விவசாய அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் ஆகியோரிற்கு இடையில் சந்திப் பொன்று இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பு கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. இதன்போதே குறித்த மும்மொழிவுகள் உயர் ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்டன. அத்துடன் கிழக்கு மாகாண அபிவிருத்தி முன்னெடுப்புக்கள், எதிர்கால திட்டங்கள் மற்றும் வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக மாகாண அமைச்சர் எடுத்துரைத்துள்ளார்.

## கிண்ணியாவின்............

சபை உறுப்பினர்கள் எவரும் வாக்களிக்கவில்லை. எனினும் எதிராக ஐந்து உறுப்பினர்கள் வாக்களித்தனர். இதனால் கிண்ணியா பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் ஐந்து மேலதிக வாக்குகளினால் தோல்வியடைந்து ள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




## பெற்றோர்களே ! ஸாலிஹான பிள்ளைகளே உருவாக்குங்கள்

தொடர்ச்சி..

என்றே ஆசைப்படுவார்கள் உதாரணமாக ஒரு வீட்டில் எல்லோரும் நோன்பு பிடிக்கையில் அவ்வீட்டில் உள்ள ஒரு சிறுவனோ அல்லது ஒரு சிறுமியோ அதனைப் பார்த்து விட்டு தனக்கு நோன்பு பிடிக்க சக்தி இல்லாத போதும் தன்னையும் நோன்பு பிடிக்க எழுப்புமாறு தனது தாயிடம் அடம் பிடித்து விட்டு தூங்குவதற்குச் செல்வதைக் காணலாம் அப்பிள்ளை கூறியபடி எழுப்பாத போது காலையில் எழுந்து தனது தாய் தந்தையிடத்தில் அழுது சண்டையிடும். இந்நிலையில் எமக்கு பிள்ளைகள் இபாதத்களில் ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். என்பதையும் அதற்கான வழிகாட்டல்கலை வலங்க வேண்டும்.

பெற்றோர்களாகிய நாம். பிள்ளைகள் தவறு விடும் போது அதில் பெற்றோர்களாகிய நாம் போடிபோக்காக இருக்கக்கூடாது. நம்பிள்ளை வளமைக்கு மாறாக தனக்குச் சொந்தமில்லாத ஒரு புதிய பொருளுடன் வீட்டுக்கு வந்தால் அதுபற்றி நீங்கள் விசாரிக்க வேண்டும். அதனைக் கண்டும் காணாதது போல் இருந்துவிட்டால். நாளை அதைவிட பெரியதொரு பொருளுடன் வீட்டில் நுழைவான். இந் நிலை இறுதியில் மிகப்பெரிய கள்வனாக ஆக்கிவிடும் எனபதில் சந்தேகம் இல்லை. யாரைத் கண்டாலும் ஸலாம் சொல்லும் பண்பை உண்டாக்குங்கள் (தொடரும்)

அப்துல் ஜபார் நளிமியா

## தொலைக்காட்சியும் குடும்பக் கதையும்

தொடர்ச்சி...

சினிமாவில் மூல்கிய நெஞ்சங்களே! நீங்கள் இவைகளை கொஞ்சம் சீர் தூக்கிப்பார்க்கவேண்டும். பெண்களை வெறும் மோகப் பொருளாக பாவித்து ஆண் சமூதாயத்தை சீரலிப்பது மட்டு மன்றி பரம்பரையையே! சினிமா எனும் சாக்கடைக்குல் தள்ளிவிடுகிறார்கள். சினிமாவினால் பிள்ளையை மட்டு மின்றி தனது அன்பான கணவனையும் கவனிக்க தவரிவிடுகிறார்கள். பெண் என்பவள் குடும்பத்தை கட்டியொழுப்ப கூடிய சிறந்த சிற்பி சினிமா என்ற சாக்கடையால் சீரலிந்து விடுகிறாள். அந்த பெண்.

அத்தனை முன்மாதிரிகளையும் தந்த இஸ்லாமிய கொள்கையை சுமந்து வாழும் சமூகமே! நீங்கள் போலியான முன்மாதிரியை நடிகர்களிடம் தேடி அலைவது சரிதானா? இவர்களை முஸ்லிமானவன் என்று எப்படி தேர்ந்தெடுக்கலாம். பெயர் தாங்கிய முஸ்லிம்களாக வாழ்வதன் மூலம் யாரையும் ஏமாற்றி விட்டதாகவும் எண்ணிக் கொள்ளலாம். ஆனால் இறுதியில் யாரும் ஏமாந்து போகமாட்டார்கள். இஸ்லாமிய நெஞ்சங்களே! பெறுமதிமிக்க நமது வாழ்வை அலட்சியம் செய்து விடக்கூடாது. இவ்வுலகம்தான் நாம் திருந்தி வாழ்வதற்குரிய ஒரே இடம் பாவமண்ணிப்புக்காக விரைவாக திரும்புவோம தவ்பாவின் பக்கம் விரைகின்ற மக்களை அல்லாஹ் மிகவும் விரும்பி மண்ணிக்கிறான் என்று அல்குர்ஆன் கூறுகிறது.

நிச்சயமாக மறுமை என்பது திருந்தி வாழ சந்தர்ப்பம் அளிக்கும் இடமல்ல. அவரது தீர்புக்களை பெற்று திருப்தியோடு சுவனம் அனுபவிக்கும் இடமாகும்.

அமீர் பாத்திமா நுஸைனா
நடுத்தீவு மூதூர் -07

முற்றும்...

## பெண் உரிமை

இஸ்லாம் பொதுவாக மனித வாழ்க்கையை பல்வேறு கோணங்களில் சீர்படுத்தி இருக்கின்றது. இந்த வகையில் ஜாஹிலியாக் காலத்தில் தமது அந்தஸ்து உரிமைகளை இழந்திருந்த பெண்களை மதிக்க வேண்டும்.

என்பதற்காக பெண்களுக்கு சமூகத்தில் சில அந்தஸ்துகளையும் உரிமைகளையும் வழங்கி அவர்களின் வாழ்க்கையை இஸ்லாம் சீர்படுத்தியுள்ளது.

உலகுக்கு வழிகாட்ட வந்த நபிமார்களையும் உத்தமர்களையும் சிரமத்திற்கு தாங்கி ஈன்றெடுத்தவர்கள் பெண்களாவர்.

இறைத்தூதர் (ஸல்லல்லதஹு அலைஹிவஸல்லம்) அவர்களின் நபித்துவத்தை முதலில் ஒப்புக்கொண்டு நபி அவர்களுக்கு ஆறுதல் வழங்கியவர் அவர்களின் மனைவி அன்னை ஹதீஜா (ரழியால்) அவர்களே! மேலும் இஸ்லாமிய வரலாற்றில் இஸ்லாத்திற்கு உயிர்த்தியாகஞ் செய்த பெண்களையும் நாம் காணலாம். (தொடரும்)

## பிறர் உன்னை தொழுவிற்கு முன் நீ தொழுது கொள்

கலிமா சொன்ன மனிதனுக்கு தொழுகை கடமையாகின்றது. இஸ்லாத்தின் அடிப்படை வணக்க வழிபாடுகளுல் தொழுகை முக்கிய மானதாகும்.

இஸ்லாம் என்ற விரிவான வாழ்க்கை அமைப்பு முறை ஐந்து அடிப்படைகளின் மீது கட்டி எழுப்பிய்ள்ளதாக நபி அவர்கள் கூறினார்கள். தொழுகை என்ற தூண் மிகவும் உறுதியானது.

யார் தொழுகையை நிலை நிறுத்துகிறாரோ அவர் இஸ்லா த்தை நிலை நிறுத்துபவராவார். இன்னுமொரு ஹதீஸிரே குறிப்பிடப்பட்டுள்ளது."தொழுகை இல்லாதவனுக்கு இஸ்லாத்திலே எவ்வித பங்கும் மில்லை என்று கூறப்பட்டுள்ளது.

தொழுகையை நிறைவேற்றப் போகும் மனிதனின் உள்ளத்தை தூய்மை படுத்துவதற்காக உடலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

சுத்தம் ஈமானின் பாதி அன்று நபியவர்கள் சுட்டிக் காட்டினார்கள். மனிதனை தூய்மை படுத்தி அவனது வாழ்க்கையை சீர்படுத்தி விடுவதற்கு இத்தொழுகை வழிவகுக்கும்நிச்சயமாக தொழுகை (தொடரும்)




## சில அழகுக் குறிப்புக்கள்



* முகச்சுருக்கத்தை போக்க தேங்காய் எண்ணெயில் மஞ்சத்தூளை போட்டுக் குலைத்து உடம்பிற்கு தடவி. பயத்தம்மாவை தேய்த்துக் குளித்தால் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.
* ஒரேஞ்சு பழத்தை இரண்டாக் வெட்டி முகத்தில் தேய்த்து, 10 நிமிடம் கழித்து சோப்பு போட்டுக்கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்.
* முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்கி அடிக்கடி எலுமிச்சை சாற்றை தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.
* வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பை மேனி இலைகளைக்காயவைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குலைத்து, முகத்தில் பூசி 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முகம் வேர்க்குரு வராமல்,வெளியில் கருத்துப் போகாமல் இருக்கும்.
* அப்பிள் பழத்தை சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசை குறையும்.

## உதடு உலர்ந்து விட்டதா?



உதட்டில் வெடிப்பு ஏற்பட்டு சிலருக்கு இரத்தம் கசியும். உதடு கறுத்து விடும் இதற்கு காரணம் உடலில் உஷ்ணம் இருப்பதுதான். இதைப் போக்க வெந்தயத்தை 1 ஸ்பூன் இரவில் ஊறவைத்து காலை எழுந்ததும் ஒருடம்ளர் மோரில் அந்த வெந்தயத்தை போட்டுக்குடித்து விட வேண்டும்.

இரவில் வெண்ணையை சிறிதளவும் உதட்டில் தடவவும். சிறு உருண்டையை விழுங்கிவிடவும். இப்படிச் செய்து வந்தால் உதடு பழைய பொலிவுக்கு வந்து விடும்.

## கண்ணில் கருவளையம் மறைய



சில பெண்களுக்கு கண்களைச் சுற்றிக்கருப்பு வளையம் இருக்கும். இதை நீக்க வெள்ளரி, உருளைக் கிழங்கு இரண்டையும் நன்றாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு துணியை பன்னீரில் நனைத்து கண்ணின் மீது வைத்து படுத்து தூங்க வேண்டும். இவ்வாறு 5 நாட்கள் செய்தாலே போதுமானது வளையம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

## உங்கள் அழகைக் கெடுக்கும் உணவு வகைகள்

### வெள்ளை பிரட்



ஆரோக்கியமான சருமத்தை நீங்கள் பெற விரும்பினால், நீங்கள் தவிர்க்க வேண்டியமுதல் பொருள்தான் இந்த வெள்ளை பிரட். பருக்கள் வரக்கூடிய முகம் உங்களுடையது என்றால், இதில் நிறைந்துள்ளகிளுடேன் உங்கள் பருக்களை இன்னும் மோசமாக்கும்.

### இனிப்பு

அழகான இளமையான சருமத்தை நீங்கள் பெறவிரும்பினால், இனிப்புகள் உட்கொள்ளுவதை நிறுத்த வேண்டும். இந்த சுவை மிகுந்த இனிப்புகள் உங்கள் சருமத்தை வறண்டு போகச் செய்து முகத்தில் சுருக்கங்களை வரவழைக்கச் செய்யும்.

### சோயா பால்

நோய்எதிர்ப்பு சக்தி யை குறைத்து வீக்கங்களை அதிகப்படுத்தும் இந்தசோயா பால் தான் உங்கள் சரும பிரச்ச னைகளுக்கு முதன்மை காரணமாக இருப்பது. அதனால், சோயா பாலை தவிர்த்து நீங்கள் சாப்பிடும் உணவில் அளவை மேம்படுத்துங்கள்.

### சாக்லெட்



நீங்கள் சாக்லெட் பிரியராக இருந்தால், உங்கள் டயட்டில் என்றாவது ஒரு நாளாவது சாக்லெட் சாப்பிட விரும் புவீர்கள். ஆனால், இவை பருக்களை எதிர்த்து செயல்படும் தன்மையை குறைக்கச் செய்கின்றது. (மிகுதி அடுத்த வாரம்...)



## சமையல் குறிப்பு

### சிக்கன் டிக்கா

**தேவையான பொருட்கள்:** கோழி இறைச்சி-1/4, தயிர்-1/4கப், இஞ்சி, பூண்டு விழுது-சிறிதளவு ஏலக்காய்-3,மிளகுத்தூள், சீரகத்தூள்,மிளகாய்த்தூள், மஞ்சள்தூள்-சிறிதளவு கடலைமாவு,எலுமிச்சை சாறு-சிறிதளவு, வெண்ணெய்-சிறிது

**செய்முறை:** கோழி இறைச்சியினை எலும்புகளை நீக்கி சுத்தம் செய்து பெரிய துண்டங்களாகவெட்டிக் கொள்ளவும். ஏலக்காய், பொடியாக அரைத்து சிறிதளவு எடுத்து கொள்ளவும்.

தயிரினை நன்கு அடித்துக் கொண்டு அதனுடன் இஞ்சி, பூண்டு விழுது, மிளகுத் தூள், சீரகத்தூள், மிளகாய்த் தூள், மஞ்சள் தூள், எலுமிச்சைசாறு , தேவையான உப்பு, கடலைமாவு அனைத்தையும் சேர்த்து எண்ணெய் விட்டுக் கலந்து கொள்ளவும். இந்த கலவையினை கோழித் துண்டுகள் மீது பூசி 4 மணி நேரம் நன்கு ஊற விடவும்.

இந்த துண்டுகளை ஒரு கம்பியில் நுழைத்து 350 டிகிரி சூடேற்றப் பட்ட ஓவனில் வைத்து 10 நிமிடங்களுக்கு வேக வைத்து எடுக்கவும் (தந்தூரி அடுப்பில் 8 நிமிட ங்கள் போதுமானது. 3நிமிடங்களுக்கு ஒரு முறை எடுத்து வெண்ணெய் தடவி மீண்டு ம் வேகவிடவும்.

பின்னர் எடுத்து பரிமாறவும். தேவையானால் அதன்மீது கொத்தமல்லி, தக்காளிசாஸ், வெள்ளரிக்காய், கேரட் தூவிக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலையடிவேம்பில் முதியோர், வலுவிழந்தோர் விழா

(உ.உதயகாந்த்)



ஆலையடிவேம்பு பிரதேச செயலக சமுகசேவைகள் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச முதியோர் மற்றும் வலுவிழந்தோர் தின விழா இன்று 11-12-2013, புதன்கிழமை பிரதேச செயலாளர் வேதநாயகம் ஜெகதீசன் தலைமையில் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வின்போது கடந்தகாலங்களில் சமய சமுகப்பணிகளில் அதீத ஈடுபாட்டுடன் செயற்பட்டவர்கள் பிரதேச செயலாளரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் சிறுவர்களின் கலைநிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.





## சுவாமி விபுலானந்தாவில் ஒளிவிழா

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கை நிறுவக கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்த ஒளி விழா நிகழ்வு இன்று (2013-12-12) நிறுவக இராசதுறை அரங்கில் இடம் பெற்றது.

இன் நிகழ்வில் கத்தோலிக்க மதப்போதகர்கள், கல்வி சார், கல்வி சாரா உழியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொள்வதையும் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் கலை கலாச்சார நிகழ்வில் பங்கு கொள்வதை படங்களில் காணலாம். (பர்ஹான்)





## வவுணதீவில் துர்க்கா மகளிர் சங்க கலாசார நிகழ்வு

பதினாறு நாள் பால்நிலை வன்முறைக்கு எதிரான செயற்பாட்டு வாதத்தை முன்னட்டு சுவீடன் கூட்டுறவு நிலையத்தின் அனுசரணையுடனும் வவுணதீவு துர்க்கா மகளிர் சங்கத்தின் ஏற்பாட்டிலும் கடந்த 12ம் திகதி வவுணதீவு துர்க்கா மகளிர் சங்க ஒன்று கூடல் மண்டபத்தில பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்போம் என்னும் தொனிப் பொருளின் கீழ் கலாச்சார நிகழ்வு இடம்பெற்றது



.இதன் போது பெண்கள் சமூகத்தில் வண்முறை இல்லாது வாழவேண்டும் என்பதற்காகவும் பெண்கள் மத்தியில் பரஸ்பர உறவு நிலை காணப்பட வேண்டும் என்ற நோக்குடன் வெள்ளைப்பட்டி அணிவத்தலும் மெழுகு திரி ஏற்றல் நிகழ்வும் இடம் பெற்றது. குறிப்பிடத் தக்கது. (றோசினி)

## அனாமேதயக் குண்டை அயல் காணிக்குள் எறிந்து வெடித்ததால் காயம்

மட்டக்களப்பு, வெல்லாவெளி காவல்துறை பிரிவிற்குட் பட்ட விளாந்தோட்டம் அலியார் வட்டைப் பகுதியில் மோட்டார் ரக குண்டு தவறுதலாக வெடித்ததில் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

விளாந்தோட்டம் அலியார் வட்டையைச் சேர்ந்த ஏரம்பு - அருண்குமார் என்பவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் (08) தனது வீட்டு காணியை சுத்தம் செய்து கொண்டிருக்கையில் இக் குண்டை கண்டேடுத்துள்ளார்.

பின்னர் பாழடைந்த அயல் காணியில் வீசிய போது அக்குண்டு திடீர் என்று வெடித்ததில் அந்நபர் படுகாயம் அடைந்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

வெல்லாவெளிக் காவல்துறை மற்றும் இராணுவத்தினர் விசாரணை களை நடாத்தி வருகின்றனர். (நரேஸ்)

## "மர்ம நோயைப் பரப்பியது ஜநாவின் உணவு மற்றும் விவசாய நிறுவனம்"

ஐந்து லட்சம் மக்களுக்கு பரவக் காரணமாக இருந்ததாக ஜநாவின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் மீது இலங்கையின் சிவில் சமூக அமைப்பு ஒன்று புகார் செய்துள்ளது என பி.பி.சி தெரிவித்துள்ளது..

பல்தேசிய நிறுவனங்களின் சார்பில் ஜநா உணவு மற்றும் விவசாய நிறுவனம், விவசாய இரசாயனப் பொருட்களின் பாவனையை ஊக்குவித்ததாக வளர்ச்சிக்கான செயற்பாட்டுக் குழு The Swarna Hansa Foundation என்னும் அமைப்பு கூறுகிறது.

அதன் வி'த்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜநா இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

ஜநா உணவு மற்றும் விவசாய நிறுவனம் அந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளது.

மூன்று வகையான இரசாயனங்களை தாம் தடைசெய்துள்ளதாக இலங்கை விவசாய அமைச்சு பிபிசியிடம் கூறியுள்ளது.

## மீண்டும் சந்தைக்கு முன் போராட்டம்???

திருகோணமலைச் சந்தைக்கு முன் மற்றொரு போராட்டம் இன்று நடைபெறவுள்ளதாக நம்பகமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த 10ம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டம் விசமிகள் சிலரின் தாக்குதலால் கலைந்து போனமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுவலைக்குத் தடை - மக்களின் வயிற்றில் அடிக்குமா?

புல்மோட்டை- எம்.எஸ்.எம்.நியாஸ்

புல்மோட்டை கொக்கிளாய் சிறுகடலில் இறால் பிடிப்பதற்காக பயன்படுத்தப்படும் கட்டு வலை சட்டவிரோத தொழில் எனக்கருதி தடை செய்யப்படுமானால் புல்மோட்டையில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பட்டினியில் வாடும் அபாயம் நிலவும் என புல்மோட்டை பிரதேச மக்கள் அச்சப்படுகின்ரார்கள்.

புல்மோட்டையில் சுமார் 3350 கும் மேற்பட்ட குடும்பங்கள் இருக்கின்றன இவற்றில் 400ற்கும் குறைவான குடும்பத்தினரே அரச தொழிலில் ஊதியம் பெற்று வாழ்க்கையை கொண்டு செல்கின்றார்கள்.

மிகுதியான எல்லாக் குடும்பங்களும் ஏதோ ஒரு வகையில் கொக்கிளாய் சிறுகடலில் இறால் பிடித்தே தங்கள் ஜீவனோ பாயத்தை கொண்டு செல்கின்றார்கள். இந்த தொழில் சுமார் நூற்றாண்டுக்கு மேலாக அவர்களின் பாரம்பெரிய தொழிலாக செய்து வருகின்றார்கள். ஆனால் கடந்த மாதங்களில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளின் திடீர் சோதனையின் போது புல்மோட்டை மீனவர்கள் பலர் பல தடவைகளில் கைது செய்யப்பட்டு முல்லைதீவு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். இதன் போது கைது செய்யப்பட்ட இறால்,மீன்பிடி உபகரணங்களின் பெறுமதி பல மில்லியன்களாகும். அதேநேரம் இதேபோன்ற தொழிலில் ஈடுபடுகின்ற கொக்கிளாய், கொக்குதொடுவாய், கர்நாட்டுக்கேணி மற்றும் சிங்கபுர போன்ற பிரதேசத்தினர் யாரும் கைது செய்யப்படவில்லை. இது திட்டமிட்ட சதியா எனக்கேள்வி எழுப்புகின்றார்கள் புல்மோட்டை மீனவர்கள்.

அதேவேளை சட்டவிரோத தொழிலாகக் கூறப்படும் விடுவலை, தங்கூசி வலை மற்றும் பெற்றோல், மண்எண்ணெய் இயந்திரம் பொருத்தி ஆற்றில் [illegible] போன்றவை [illegible] வருகின்றன. இவைகளும் முற்றாக தடை செய்யப்படுமானால் நீர்கொழும்பு மற்றும் வென்னப்புவ பிரதேசங்களில் இருந்து வந்து கொக்கிளாய் பிரதேசத்தில் குடியிருந்து இதுபோன்ற தொழிலில் ஈடுபடுபவர்கள் மீண்டும் தங்கள் சொந்த பிரதேசங்களுக்கு செல்ல வேண்டி வரலாம் என புல்மோட்டை மீனவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இப்பிரச்சினை தொடர்பாக புல்மோட்டை மீனவர்கள் சம்மந்தப்பட்ட அரசியல்வாதிகளுக்கும், அரசாங்கத் திற்கு அறியப்படுத்தியதை அடுத்து 2013.12.06 அன்று சிங்கபுர மீனவர் ஓய்வு விடுதியில் பாதுகாப்பு அமைச்சின் அலுவலர்கள், கிழக்குமாகான சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர், குச்சவெளி பிரதேச சபை தலைவர் எ.முபாரக், உபதலைவர் எ.தௌபீக். புல்மோட்டை முக்கிய பிரமுகர்கள் இராணுவ அதிகாரிகள், கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகள் மற்றும் மீனவ சங்கத்தினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு இப்பிரச்சினை தொடர்பாக ஆராயப்பட்டு சட்டவிரோதமான தொழில்கள் யாவும் 2014 ஜனவரி 01ம் திகதியிளிருந்து முற்றாக தடை செய்யப்பட வேண்டும் என கூட்டத்தில் தலைமை தாங்கிய அதிகாரிகளினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என மாகாண சபை உறுப்பினர் அன்வர் தெரிவித்தார்.

நுாற்றாண்டுகாலமாக செய்யப்பட்ட இப்பாரம்பெரிய தொழிலை ஒரே தடவையில் முற்றாக தடை செய்யப்டுமனால் புல்மோட்டை மீனவர்களின் நிலைப்பாடு என்ன? இந்த விடயம் தொடர்பாக தற்காலிக தீர்வையாவது பெற்று தருமாறு அரசாங்கத்திடம் நேசக்கரம் நீட்டுகின்றார்கள் புல்மோட்டை மீனவர்கள்.

கொக்கிளாய் சிறுகடலில் புல்மோட்டை, கொக்கிளாய், கொக்குதொடுவாய், தென்னை மரவாடி, சிங்கபுர மற்றும் கர்நாட்டுக்கேணி போன்ற பிரதேசங்களில் வதியும் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களே தொழில் செய்து வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் செயற்படும் இடங்களில் இராணுவம் முற்றாக வெளியேற வேண்டும்

### சாலோகா பெயானி



மக்கள் செயற்படும் இடங்களில் இருந்து இராணுவத்தை முற்றாக அப்புறப்படுத்த வேண்டும் என ஐநாவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மனித உரிமைகள் குறித்த சிறப்புப் பிரதிநிதி சாலோகா பெயானி கூறியுள்ளார்.

இலங்கைப் பயணம் தொடர்பாக ஐ.நாவின் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அளித்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ''தேசியப் பாதுகாப்பிற்கான இராணுவக் கரிசனைகளும், பொதுமக்களின் வாழ்வதற்கும் நடமாடுவதற்குமான இடத்தைத் தெரிவு செய்வதற்கான உரிமையும் சமநிலையில்.... 13

## புனித நிக்கலஸ் தேவாலயத்தின் ஐம்பதாண்டு நினைவுகள்



செங்கலடி புனித நிக்கலஸ் தேவாலயத்தின் ஐம்பதாவது ஆண்டினை முன்னிட்டு விசேட நிகழ்வுகள் தேவாலயத்தில் அண்மையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும்..... 13

### சித்திரவதை, ஆட்கடத்தல்கள், காணாமல் போதல் நிறுத்தப்பட வேண்டும்

## உள்நாட்டுப் பிரச்சனையை நாமே தீர்ப்போம்



"இலங்கையில் உள்ளவர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல. எமது பிரச்சனைகளை நாங்களே தீர்த்துக் கொள்கின்றோம்" என உலகை நோக்கி அறைகூவல் விடுத்துள்ள பேராயர் கர்தினால் மல்கம் இரஞ்சித் இலங்கை அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்காது விட்டால் அந்நியத் தலையீடுகள் தவிர்க்க முடியாது போய்விடும் என அரசிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

24 பக்கக் கடிதமொன்றை சனாதிபதிக்கு வரைந்துள்ள ஆயர்கள் சபை அரசு மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், நல்லிணக்கம் தொடர்பாகவும் தகுந்த நடவடிக்கைகளை எடுக்காது விட்டால் தவிர்க்க முடியாமல் சர்வதேசத் தலையீடுகள்...... 13

### அன்று அமரர் அஷ்ரவ் ஏற்றுக்கொண்டதை

## இன்று முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கின்றது

கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்தப் படுத்தல் சம்மந்தமான கலந்துரையாடலின் போது முஸ்லிம் காங்கிரஸ் அவ்வாறு தரமுயர்த்தப் படுவதற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது.

அவ்வாறு எதிர்ப்புத் தெரிவித்ததை கல்முனை பெதுமக்கள் (சிவில்) சமூகமும், கல்முனை பிரதேச புத்திஜீவிகள் அமைப்பும் கடுமையாகக் கண்டித்துள்ளன. அவ்வமைப்புக்கள் இணைந்து வெளியிட்ட கண்டன அறிக்கையில் இப்பிரதேச செயலகம் தேவை... 13

## 15 பவுண் தடை நீங்கியது

விமானத்தளத்தின் ஊடாக எடுத்துச் செல்லப்படும் பவுண் நகைகளுக்கான எல்லை கடந்த வாரம் விதிக்கப்பட்டிருந்தது.

சுமார் 15 பவுண் நகைகளை வளந்த பெண் ஒருவரும், தலா 5 பவுண் நகைகளை ஆண் மற்றும் குழந்தையொன்றும் எடுத்துச்.... 13

## கிண்ணியாவின் வரவுசெலவுத் திட்டம் தோல்வி

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள கிண்ணியா பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் ஐந்து மேலதிக வாக்குகளினால் தோல்வியடைந்துள்ளது.

கிண்ணியா பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் தவிசாளர் எஸ்.எல்.எம்.ஜவாத்துல்லாஹ்வினால் இன்று வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வரவு - செலவுத் திட்டத்திற்கு பிரதேச...... 13

## சர்வதேச விசாரணையைப் பலப்படுத்த மற்றுமோர் வழக்கு

பிரித்தானியாவில் அகதி அந்தஸ்த்துக் கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ள காவல்துறை அலுவலர் ஒருவரின் வழக்கினால் சர்வதேச விசாரணையை வேண்டி நிற்கும் பிரித்தானியாவின் குரல் மேலும் வலுப் பெற்றுள்ளது என கொழும்பு டெலிகிராப் செய்தி வெளியிட்டுள்ளது.

அடையாளம் குறிப்பிட விரும்பாத காவல்துறை அலுவலர் ஒருவர் பிரித்தானியாவில் புகலிடக் கோரிக்கையொன்றை மேற்கொண்டுள்ளார். அவர் தனது கோரிக்கையில் தெரிவித்துள்ள தகவல்களின் அடிப்படையில் தீர்ப்பளித்துள்ள ஐக்கிய இராச்சிய உயர்மட்ட நீதிமன்றம், இலங்கை அரசானது "குறிப்பாகத் 13

### கிழக்கு மாகாணத் திட்டங்கள் பாகிஸ்தானிடம்



கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தவுள்ள முதலீட்டு திட்டங்களின் மும்மொழிவுகள் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகரிடம் கையளிக்கப் பட்டுள்ளது. இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஹாஸிம் ஹுரேசியிற்கும் கிழக்கு மாகாண..... 13


# வேல் முன்பள்ளி வருடாந்தக்கலைவிழா 2013










06.01.2014 முன்பள்ளி ஆரம்பம்

தொடர்புகளுக்கு: No.27, Lavender Lane ,Trincomalee.
T.P 026 3204840


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org